"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஜப்பசி – கார்த்திகை – மார்கழி – 2025




ISSN 2055-6616

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

மணி 33

# கலசம்
KALASAM

ஒலி 116

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# நாளை நமதே!

குன்னக்குடி முருகன் கோயிலில், சில வருடங்களுக்கு முன் பார்த்த ஒரு காட்சி. சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவர். அவர் கையில் இரண்டரை அல்லது மூன்று வயதுப் பையன். கோயிலின் சிற்பங்களைக் காட்டி, அவற்றின் பின்னாலுள்ள புராணக் கதைகளை அந்தப் பையனுக்கு அவனின் தந்தை சொல்கிறார். புரிகிறதோ, புரியவில்லையோ பையன் கேட்கிறான். மேற்கு நாடுகளிலும் இம்மாதிரியான பெற்றோர்களைப் பார்க்க முடிகிறது. ஆனால் எல்லோரையும் அப்படியென்று சொல்லிவிட இயலாது.

மேற்கு நாடுகளில் கலாசார நிகழ்வுகள், கோயில், விழாக்கள் என்று போனால், தங்கள் பிள்ளைகளுக்குச் சலிப்பாக இருக்கிறது என்று சில தமிழ்ப்பெற்றோர் நினைக்கிறார்கள். அதனால் அவர்களை விழாக்களுக்குப் பொதுவாக அழைத்துச் செல்வதில்லை. அழைத்துச் சென்றால் அவர்களை வெளியே இருத்தி, ஒரு கைத் தொலைபேசியையோ, படங்கள் வரையக்கூடிய காகிதங்களையோ கொடுத்துவிட்டு நிம்மதியாகப் போகிறார்கள். யாராவது நல்லுள்ளம் கொண்ட தொண்டர்கள் இந்தப் பிள்ளைகளைப் பராமரிக்கிறார்கள். பின்னர் நிகழ்ச்சி நிறைவானதும் பெற்றோர் அவர்களை வீட்டுக்கு அழைத்துப்போகிறார்கள். நாங்கள் நிம்மதியாக நிகழ்ச்சியைப் பார்த்தோம், கோயில் தரிசனம் செய்தோம் என்ற மகிழ்ச்சி அவர்களின் முகத்தில் தெரியும்.

பல்கலைக்கழகம் புகும் வயது வரும்போதுதான் இந்தப் பிள்ளைகளுக்குக் கலாசாரங்களின் வித்தியாசம் தெரியவருகிறது. அப்போது சில பிள்ளைகள் மேற்குக் கலாசாரத்துடன் ஒன்றிப் போய்விடுகிறார்கள். வேறு சிலர், “எனக்கேன் தமிழ் சொல்லிக் கொடுக்கவில்லை?, விழாக்கள் பற்றி ஒன்றும் தெரியாது!” என்று ஏங்குகிறார்கள்; பெற்றோரைக் குறை கூறுகிறார்கள். “கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது” என்பது இதைத்தான்.

பிள்ளைகளை விழாக்களுக்கு அழைத்துச் செல்லும்போது, அவர்களையும் உடனிருத்தி விளக்கம் கொடுத்துப் பழக்கவேண்டியது பெற்றோரின் கடமை. பொறுமை, பிறரை மதித்தல், கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை என்பவற்றைப் பிள்ளைகள் கற்க இது உதவும். ஆன்மிகமும் கலாசாரமும் அவர்களுக்குப் புரியும்.

க ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்

# இந்த இதழில்

வாதவூர் வண்டு 03

வீண் வம்பு கந்தபுராணச் சிந்தனைகள் 07

Let us clear our doubts 09

யோகம் சுட்டும் வாழ்வியல் நெறி 10

Mavidapuram Kanthasamy Temple 13

திங்களூர் - பயணக் கட்டுரை 16

திருக்குறள் கதைகள் 27

முத்தான முதுமை 30

Saiva School of Hinduism 33

கலியுகத் தெய்வம் கந்தனும் கந்தசட்டி விரதமும் 38

நந்திக் கொடி 43

அட்டைப்படம்: மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்

வடிவமைப்பு - குகன்

கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்

கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்

# வாதவூர் வண்டு

திருமுருக கிருபாநந்தவாரியார்



வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேனை எடுப்பதுபோல், வேதாகம உபநிடதங்களிலிருந்து, வாதவூரராகிய வண்டு திருவாசகமாகிய தேனை எடுத்து, உலகம் உள்ளவரை உண்ண உயிர்களாகிய நமக்கு வழங்கி யருளினார். தேன் தான் கெடாததோடன்றி தன்னில் ஊறவைத்த பேரீச்சம்பழம், திராட்சை, இஞ்சி முதலிய பொருள்களையும் கெட விடாததுபோல், திருவாசகம் தான் அழியாதது மட்டுமன்றி, தன்னை ஓதுவாரையும் அழியாமற் காக்கும் திறனுடையது என்பதை இக் கட்டுரை விளக்குகின்றது.

தேன் மிகவும் இனிமையானது. உலகில் உணவுப் பொருள்கள் பலவுண்டு. பால், தயிர், நெய், பழம், கிழங்கு என்பனவாதி பல்வேறு உணவுப் பண்டங்கள் யாவும் நாள் சென்றாற் கெட்டுவிடும். எத்துணை உயர்ந்த பாலாயினும் மூன்று நாள்கள் வைத்திருந்து அதனைப் பருகவொண்ணாது. நல்ல பழம் ஒரு மாதம் வைத்து உண்ணமுடியாது. உணவுப் பொருள்கள் யாவுமே நாள் சென்றால் சுவை குன்றும்; நாறும்; உடம்புக்கு ஊறுசெய்யும்.

கெடாதது:

ஆனால் உணவுப் பொருள்களில் ஒன்றுமட்டும் எத்துணை ஆண்டுகள் கழிந்தாலும் கெட்டுப்போகாது; தன்னிலை மாறாது நின்று சுவை பயக்கும். அத்தகைய உணவுப்பொருள் எது? தேன் ஒன்றுதான்! தேன் நாள் செல்லச்செல்லப் புளிக்காது; புளிக்குமாயின் வெல்லப்பாகு கலந்த தேன். நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூருக்குப் போகும் வழியில் பூமியை அகழ்ந்தார்கள். அதில் ஒரு தேன் பாட்டில் கிடைத்தது. அது பலநூறு ஆண்டுகட்குமுன் புதைக்கப்பட்டது.

எனவே, தேன் என்றும் கெடாது ஒரு தன்மையாக இருப்பது. இதுபோல், திருவாசகமும் ஒருபோதும் சிதையாத சிறப்புடையது.

அழியாத் தன்மையது:

இனி, தேன் தான் கெடாததோடன்றி தன்னில் ஊறவைத்த பேரீச்சம்பழம், திராட்சை, இஞ்சி முதலிய பொருள்களையும் கெடவிடாது. லேகியங்களில் தேன் கலப்பதன் காரணம் அதனைக் கெடவிடாமல் காப்பதற்கென உணர்க. அதுபோல் திருவாசகம் தான் அழியாததது மட்டுமன்றித் தன்னை ஓதுவாரையும் அழியாமற் காக்கும் திறனுடையது.

- எல்லை

மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகமென்னுந் தேன்

(எல்லை - முடிவு, மருவா நெறி - முடிவு இல்லாத தன்மை)

தேன் பித்தத்தைப் போக்கும்; மந்தத்தைத் தவிர்க்கும்; நல்ல இரத்தத்தை நல்கும். நெடுங்காலமாக வந்து எமக்குத் தொல்லைதரும் பிறவிப்பிணியை மாற்றும் திருவாசகத் தேன்

நோய் தீர்க்கும்:

உடம்புக்குப் பல பிணிகள் உண்டு. அப் பிணிகளை எளிதிற் போக்கவல்ல மருந்து தேன். உயிருக்கு என்றும் தொடர்ந்துவரும் நோய் பிறவி. எண்ணில் காலமாக எண்ணில்லாத இடங்களில் எண்ணற்ற பிறவிகளில் மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் வருகின்ற உயிர்களாகிய நமக்குச் சிறந்த மருத்துவராகிய வாதவூரடிகள் திருவாசகத் தேனை 658 பாடல்களில் தந்து அந்நோய் தீர அருளினார்கள்.

அல்லல் அறுக்கும்:

“தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கும்” தேன் மந்தத்தைத் தவிர்க்கும், திருவாசகத்தேன் அறியாமையை அகற்றும். அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைகின்னறன. அறியாமையால் விளையும் அல்லல்கள் அனந்தம். கவர் பிளந்த மரத்தொளையில் கால் நுழைத்துக்கொண்டு குரங்கு ஆப்பை அசைத்து எடுத்தும்விட்டது. பிளந்திருந்த மரம் நெருங்கியவுடன் அவ்வானரத்தின் வேதனைக்கு எல்லையுண்டோ? ஏன் இந்தத் துன்பம் அதற்கு எய்தியது? அறியாமையால் வந்தது. இங்ஙனம் மக்கள் அறியாமையால் இடர்களும் எய்துகின்றனர். இத்தகைய அறியாமையை அறவே களைய வல்லது திருவாசகத் தேன்.

அல்லல் அறுத்து:

தேன் நல்ல இரத்தத்தைத் தரும். மேலும் பிறவா நோயும் அறியாமையும் அகன்றவுடன் சிவானந்தம் விளையும். அந்த ஆனந்தத்தை அளிக்கும் திருவாசகத் தேன்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

தேனும் திருவாசகமும்:

திருவாசகத்தில் தேன் என்ற இனிய சொல் அதிகம் வருகின்றது.

“இறைவன் அடியார் சிந்தனையுள் தேன்போலக் கலந்து நின்று பிறப்பை ஒழிப்பான்” என்கிறார்

“சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்”

“தேசனே தேனார் அமுதே சிவபுரனே” - சிவபுராணம்

“தேனமர் சோலைத் திருவாரூரில்
ஏனந் தன்னை நல்கிய நன்மையும்” - கீர்த்தித் திருவகவல்

"ஆற்றேனாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்"

"குரம்பை கொண்டுஇன் தேன் பாய்த்தி
கருணை வான்தேன் கலக்க". - திருவண்டப்பகுதி

"இன்னதென் றறியாத தேனே"

"தேனிலாவிய திருவருள் புகுந்து" - திருச்சதகம்



"வந்திங்கு ஆட்கொண்ட தேனே"

"தேனே அமுதே சிந்தைக் கரியானே"

"தேனே அமுதே கரும்பின் தெளிவே"

"தேன்வந் தமுதின் தெளிவின்"

"தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியாய்"

"நந்தாத் தேனைப் பழச் சுவையை"

"தேனுந்து சேவடிக்கே"

"தேன் தங்கித் தித்தித்து அமுதூறி"

"கோற்றேன் என்கோ எனக்கு"

"அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்"

"உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து
புறம்புறம் திரிந்த செல்வமே"

"தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்"

இவ்வாறு திருவாசகத்தில் தேன் என்ற சொல் ஆங்காங்கு பயிலப்படுகின்றது. விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் ஈண்டு குறித்தேன்.

வாதவூர் வண்டு:

வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேனை எடுப்பதுபோல் வேதாகம உபநிடதங்களிலிருந்து வாதவூராகிய வண்டு திருவாசகமாகிய தேனை எடுத்து உலகம் உள்ளவரை உயிர்களாகிய நமக்கு வழங்கியருளினார்.

திருமூலர், தேனுக்குன் இன்பஞ் செறிந்தாப்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே என்றும், அருணகிரிநாதர், “உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே” என்றும் தேனைப்பற்றிக் கூறியுள்ளனர்.. பல மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட தேன் எவ்வாறு உடலுக்குச் சிறந்த உணவாக அமைந்துள்ளதோ, அவ்வாறு திருவாசகத்தேன் உயிருக்கு ஒப்பற்ற உணவு எனவுணர்க.

ஆகவே அன்பர்கள் அனைவரும் பிறவி நோய் தீரும்பொருட்டுத் திருவாசகத் தேனை நாடோறும் பருகி, உருகி அருள் பெருகிப் பெருநலம் பெற்று உய்வார்களாக.

நன்றி: திருவாசகத் தேன் *1959*

# வினை தீரும் காலம்

நாம் செய்த வினையை நாமே அநுபவிக்கவேண்டும். இறைவனிடம் அன்பு செலுத்தும்போது வினையனுபவம் தீர்ந்து, மெய்யனுபவம் உண்டாகின்றது. திருஆவினன்குடியில் முனிவர்கள், கந்தருவர்கள், தேவர்கள் வழிபாடு செய்கிறார்கள். ஆனால் மூவகையினரும் மூவகை நோக்கத்தோடு வழிபாடு ஆற்றுகிறார்கள். பிறவியறவேண்டும் என்று வேண்டுகின்றனர் முனிவர்கள். உள்ளத்தில் இறைவன் இசைமயமாக ஒலியெழுப்பிக்கொண்டு இருக்கவேண்டும் என்று இசை பாடுகின்றனர் கந்தருவர்கள். போக போக்கியங்கள், பதவிகள் நிலை பெறவேண்டுமென்று வழிபடுகிறார்கள் தேவர்கள். எல்லாவற்றையும் இறைவன் ஏற்றுக்கொள்கிறான். வேண்டிய வேண்டியபடி வரங்களை நல்குகிறான்.

மணிவாசகப் பெருமானும் திருவாசகத்தில் தேவர்களின் வழிபாட்டு நோக்கத்தைக் காட்டுகிறார்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தரமுயர்ந்து தம்மையெலாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோடியை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே

திருவாவினன்குடியிலும் தேவர்களுடைய வாழ்த்து இவ்வாறே அமைந்துள்ளது. சங்கச் செய்யுள் ஒன்றில் முருகனைப் பார்த்துப் பாடுவதாக அமைந்த ஒரு பாடலில் நின்பால் இரப்பது பொன்னும் பொருளும் போகமுமல்ல, அன்பும் அறனும் அருளும் மூன்றே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வினை தீரும் காலத்தில்தான் இத்தகைய மெய்யனுபவம் கிடைக்கும்.

நன்றி: கந்தபுராணச் சொற்பொழிவுகள்
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

# வீண் வம்பு

கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

சில சமயங்களிலே வாழ்க்கையிலே தொல்லைகள் வலுவில் வந்து நம்மைப் பற்றிக்கொள்கின்றன. நாம் நம்முடைய சமநிலையை இழந்து தொல்லையை மிகவும் பாரியதாக்குகிறோம். செய்கின்ற செயலின் பின் விளைவுகளை அறிந்து செய்யவேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். "ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாததனாலும் கெடுவான்" என்ற பொருளுடைய

செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்

குறள் 466

என்ற வள்ளுவரின் வாக்கையும் மறந்துவிடுகிறோம். கோபமும் ஆணவமும் தலைக்கேற, நம்முடைய பெறுமதியான எல்லாவற்றையுமே இழக்கக்கூடிய முட்டாள்தனமான காரியங்களைச் செய்துவிடுகிறோம். எமக்கு மேலே நீதி, நியாயம், சட்டம், கடவுள் என்ற பல மட்டங்கள் இருப்பதை மறந்துவிடுகிறோம். எல்லா இழப்புக்களின் பிறகே உண்மையை உணர்கிறோம். இவ்வாறான ஒழுக்க முறைகேட்டைப் பெரியவர்களும் செய்துவிடுகின்றபடியால் கவனமாக இருக்கவேண்டும் என்பதைப் பிரம்மதேவரின் வாயால் கந்தபுராணம் சொல்லாநிற்கிறது.

பிரளயகாலம் என்று சொல்லப்படுகின்ற உலக அழிவுக் காலத்தில் பிரமதேவர் உறக்கம் கொள்வார். அந்த நேரத்தில் பூமி வெள்ளத்தில் ஒடுங்கும். அவ்வாறான ஒரு சமயத்தில் திருமால் ஓர் ஆலிலையிலே துயில்கொண்டார். அவரை நோக்கி முனிவர் ஒருவர் வழிபாடு இயற்றினார். விழித்தெழுந்த திருமால், பூமி வெள்ளத்தில் அமிழ்ந்து பாதாளத்தில் இருப்பதை உணர்ந்தார். பன்றி உருவெடுத்துப் பாதாள உலக்குக்குப் போய்ப் பூமியை மீட்டுவந்து அதனுடைய இடத்திலே வைத்துவிட்டுத் திருமால் மீண்டும் அறிதுயில் கொண்டார். அந்த நேரத்திலே பிரம்மதேவரின் இரவுக்காலம் நீங்க அவர் விழித்துக்கொண்டார். தன்னுடைய கற்பனையினாலே மீண்டும் உலகங்கள் யாவற்றையும் படைத்தார். தன்னுடைய படைப்பைப் பார்த்ததும் அவருக்கு அளவு கடந்த பூரிப்பும் கர்வமும் உண்டாயிற்று. பாற்கடலிலே திருமால் அறிதுயில் கொள்வது தெரிந்தது. பூமியை மீட்டுக்கொண்டுவந்த கர்வத்தில் அவர் பெருமிதத்தோடு படுத்திருப்பதும் தெரிந்தது. பிரம்மதேவர் நேரே திருமாலிடம் சென்றார். அவருடைய நெஞ்சிலே கையால் அடித்துத் துயிலினின்றும் எழுப்பினார். எழும்பிய திருமாலை, "நீ யார்?" என்று பிரம்மதேவர் வினவினார். "நான்கு தலைகளை உடைய மகனே! நான் உன் தந்தை! இதை நீ அறியாயோ?" என்று திருமால் வினவினார். சிவனே எனத் துயின்றுகொண்டிருந்த திருமாலுக்கு வீண் வம்பு வந்து சேர்கிறது. திருமாலின் பதிலைக் கேட்ட பிரம்மதேவர் சிரித்துவிட்டு, "நான் நித்திரையினின்று எழுப்பியும் நீ இன்னும் முற்றாகத் துயில் நீக்கம் செய்யவில்லைப்போல் இருக்கிறது" என்று சொன்னார்.

வாக்குவாதம் தொடங்குகின்றது. "தந்தையார் என்று இருப்பவர்கள் தம் பிள்ளைகளுக்குச் சொல்லும் சொற்களைப்போன்ற சொற்களை உன் தந்தையான எனக்குச் சொல்கிறாய். இது முறையாகாது. என்னை உன்னுடைய தந்தை என நினை. நானே பரப்பிரம்மம். இதை நீ அறிவாயாக!" என்று பிரம்தேவர் சொன்னார்.

தந்தையென வந்தவர்கள் தாமுதவு கின்ற
மைந்தர்கள் தமக்குரைசெய் வாசகம தென்ன
முந்துற எமக்கிது மொழிந்ததியல் பன்றால்
எந்தையென வேநினைதி யாம்பிரம மேகாண்

அடிமுடி தேடு படலம் *29*

பிரம்மதேவர் அத்துடன் விடவில்லை. "உனது கொப்பூழ்த் தாமரையினின்றும் யான் தோன்றிய தத்துவத்தை உணராமல் என்னை உனது மைந்தனென எண்ணிக்கொண்டாய். தன்னிடத்திலே தோன்றும் தீயினுக்கு விறகு தந்தையாகுமோ? முன்னொரு காலத்திலே ஒரு தூணில் நரசிங்கமாகத் தோன்றினாய். அதனால் அத்தூண் உன்னைவிட உயர்ந்த பொருளாகுமோ? என்னுடைய மகன் பிருகு முனிவரின் சாபத்தால் நீ பத்துப் பிறவிகளை எடுத்தாய். நீ பிறக்குந்தோறும் உனக்குரிய உடல்கள் எல்லாவற்றையும் படைத்து என் கைகள் சிவந்துள்ளதைப் பார்! ஆகையால் இனி என்னை உன் மகன் என்று சொல்வதைக் கைவிடு" என்று பிரம்மதேவர் சொன்னார்.

இந்த விதண்டாவாதத்தைத் திருமால் பொருட்படுத்தாமல் விட்டிருக்கலாம். ஆனால் விடவில்லை. வீணாக வந்த வம்பிலே மாட்டிக்கொண்டார். சினம் பொங்க இரண்டு கைகளையும் தட்டினார். "சிவபெருமான் கிள்ளிய உன் தலையைப் படைக்க முடியாதிருக்கும் நீ என்னைப் படைப்பதென்பது மிகவும் நன்றாயிருக்கிறது. விரும்பி உன்னைப் பெற்றெடுத்த தாயும் யானே! தந்தையும் யானே! உனக்குரிய தெய்வமும் யானே! உன் குருவும் யானே! என்னுடைய மாயையால் இன்று இங்கு அறிவுமயக்கம் அடைந்துள்ளாய்!" என்று திருமால் பதில் கூறினார்.

நேயமாய் முன்னரே நின்னையீன் றுதவிய
தாயும்யாம் அன்றியுந் தந்தையும் யாமுனக்
காயதோர் கடவுள்யாம் அடிகள்யாம் மைந்தநம்
மாயையால் இன்றிவண் மதிமயக் குறுதிகாண்

அடிமுடி தேடு படலம் *35*

அத்துடன் திருமால் விடவில்லை. "உயிர்களைச் சிந்திக்கச் செய்பவனும் யானே! உயிர்களின் உள்ளே இருந்து சிந்திப்பவனும் யானே! கருதப்படும் காட்சிப் பொருளும் யானே! அணுகுவதற்கு அரியவனும் யானே! நாராயணனான கடவுளும் யானே! இந்திரனும் யானே! வேதமும் யானே! வேதப் பொருளும் யானே! எல்லாவற்றுக்கும் தொடக்கமும் யானே! உருவமும் யானே! அருவமும் யானே! இருளும் யானே! ஒளியும் யானே! தந்தையும் யானே! தூயவனும் யானே! மாயவனும் யானே! யாதும் யானே! யாவரும் யானே! பூதங்களும் யானே! சிவனின் பாதியான சக்தியும் யானே! அப் பரம்பொருளும் யானே!" என்று திருமால் சொன்னார்.

ஆதிநான் உருவுநான் அருவுநான் இருளுநான்
சோதிநான் அத்தன்நான் தூயன்நான் மாயன்நான்
யாதுநான் பூதநான் யாருநான் சங்கரன்
பாதிநான் அவனுநான் பரமெனும் பொருளுநான்

அடிமுடி தேடு படலம் *38*

இவ்வாறு வாக்குவாதம் முற்றிச் சண்டை தொடங்குகிறது. பலத்த சண்டை நடைபெற்றது. இறுதியாகத் திருமால் சிவப்படைக்கலத்தை ஏவினார். பிரம்மதேவரும் ஏவினார். சிவப் படைகள் இரண்டும் ஒன்றையொன்று மோத உலகம் நலிவுற்றது. ஆனால் அவர்கள் பிடிவாதம் நலிவுறவில்லை. நாரதமுனிவர் சமாதானப்படுத்தியும் அவர்கள் விடவில்லை. அந்த நிலையிலே கருணாமூர்த்தியான சிவபெருமான் சோதிப் பிழம்பாக அவர்கள் நடுவே தோன்றினார். அடியையோ, முடியையோ அடைபவரே வென்றவர் என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். அடி முடி தேடுவதில் முயன்று உடல் வலியிழந்து மாயை அகன்று இருவரும் சிவனைப் பணிந்தனர்.

இந்த நிகழ்வை விவரிப்பதன் மூலம் பெரியோர்களைக்கூட வீண்வம்பு வந்து தாக்கும் என்பதையும், அதன்வசப்பட்டுச் சமநிலை இழந்தால் திருமாலைப்போல வீணாண கோபத்தினால் பெரும் யுத்தத்தில் ஈடுபடவேண்டி வரும் என்பதையும் கந்தபுராணம் சொல்லாநிற்கிறது.

# Let us clear our doubts!

Can Hindu Weddings be held at Beaches or in the Parks?

Hindu Wedding, according to the “Sasthra”, is performed in front of the fire (Homam), the fire being the witness - 'Agni satchi'. Also, the Groom and the Bride walk round the fire and taking the seven steps together which is very important. . During this, the Groom touches the feet of the Bride to put the ‘Medy’ (ring) on her toe. In some cultures, the man is considered to be superior to woman, whereas this is a unique thing in our culture which emphasises that man and woman are one and the same, equal - the ‘Arthanarisvarar’ phenomenon.

On the beaches or in the parks, having fire may not be possible due to regulations and ‘Health and Safety’ rules of that place. Therefore, having a wedding in front of the fire becomes impossible. Thus, it becomes only a partial process.

Today, the younger generation is influenced by other cultures and they like to copy them. We should appreciate that at least they carry on the rituals partially. Instead of criticising them, if we accept them but at the same time, explain the importance of the rituals and the reasons for doing them, they will understand and gradually begin to observe the rituals fully.

Courtsey: Sivasri Shanmukha Sivachariar
Chennai

“Let us clear our doubts” is a new section that we have started to answer readers’ questions. Questions relating to Saiva religion, rituals or temples can be sent in advance. The replies will be published in the next Kalasam issue.

# யோகம் சுட்டும் வாழ்வியல் நெறி

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

இந்து சமயப் புலத்தில் யோகம் என்பது ஒரு தத்துவ முறையாக விருத்தியுற்றிருப்பினும், அது ஒரு கலையாக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்டமை சிறப்பான அம்சமாகும். தற்காலத்தில் எழுச்சிபெற்றுள்ள அறிவியற் சிந்தனைகளின் ஊற்றுக்கண்கள் பலவும் இந்துசமய தத்துவங்களில் விதைக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் அறிவியலின் அதியுன்னத வளர்ச்சியும், தொழினுட்ப சாதனங்களின் அதிகரித்த பயன்பாடுகளும் மனித இனத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்கின்றன எனக் கூறப்பட்டாலும் அவை வாழ்வின் இருப்புக்கும் மேம்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அல்லது சவால்களாகவேயுள்ளன. தொழிநுட்ப வளர்ச்சி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சிலரின் சுயநல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மனித மாண்பற்ற ஒழுக்க விழுமியங்களற்ற, உடலுள ரீதியாக பாதிப்பினை தருகின்ற செயற்பாங்குகளான முரண்பாடுகள், போட்டி, பொறாமைகள் வக்கிர சிந்தனைகள் சமூக விரோத நடவடிக்கைகள மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள், ஒட்டுமொத்தத்தில் இயற்கையை விரோதிக்கும் செயல்களே வாழ்வாகிவிட்ட சமூகத்தில் அவை எத்துணை பொருத்தப்பாடுடையதாக அமையும்? என்பதனை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது அவசியம். ஒரு சமூகத்தின் ஒழுக்கமில்லாத கல்வியும் சரி, வளர்ச்சியும் சரி அச்சமூகத்தினை வளர்ச்சியடைந்த, நாகரிகமடைந்த சமூகமாக நோக்க முடியாது.

யோகா தன்னை உணரவைக்கும் ஒப்பற்ற கலை வடிவம். ஒரு மனிதனை எல்லா நோய்களி லிருந்தும் முழுவதுமாகக் குணமடையச் செய்து, நல்லாரோக்கியமும் முழுமைத்துவமும் உடையவனாக ஆக்க, ஆன்ம ஈடேற்றத்திற்கான அற்புத சாதனமே யோகம் என்ற நிலையில் யோகாவைப் பற்றி முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது உலக மக்களிடையே விழிப்புணர்வு பரவிவருகிறது. அதன் முக்கியத்துவம் இந்து சமய, தத்துவ நிலைகள் கடந்து உலகம் தழுவிய நிலையில் உணரப்படுகின்றது. இந்த உணர்திறனை மென்மேலும் அழுத்தம் பெறச் செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் வகிபங்கு இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தலையாய பணியாக அமைந்திருக்கின்றது. இந்துசமய இலக்கியங்களில் யோகம் பற்றிய சிந்தனைகள் பரவலாக இடம்பெற்றிருந்தாலும் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம் முதன்மை நூலாக கொள்ளப்படுகின்றது. மனம், உடல், மூச்சு ஆகிய அப்பியாசங்களினாலும் தியான முறைமைகளினாலும் கிடைத்தற்கரிய பல்வேறு ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும் இறுதியில் அடையப்பெறுகின்ற மெய்யுணர்தல் என்பது பற்றியதான சிந்தனையே யோகசூத்திரத்தின் அடிப்படைப் பொருள்மரபாக உள்ளது. இங்கு யோகம் என்பது “ஸித்த விருத்தி நிரோதக” என்று எடுத்தாளப்பட்டிருக்கின்றது. அதாவது பல்வேறு உருவ நிலைகளை எடுக்கும் சித்தத்தினைக் கட்டுப்படுத்தி தடுத்து நிறுத்துதலே யோகம் எனவும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண விருத்தி, தூய்மை முதலியவற்றை மேம்படுத்துவதற்குரிய வழிகள் யோக தத்துவத்தினூடாக விளக்கப்பட்டுள்ளன என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பழங்கால இந்திய முனிவர்களால் உருவாக்கப்பட்ட ஆன்மிக அறிவியலே யோகாவாகும். யோகா என்பது ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். இதன் வேர்கள் இந்தியப் பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றன. ரிஷிகள், முனிவர்களால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இது வளர்த்தெடுக்கப்பட்டது. நம்முடைய பழமையான வேதங்கள் அனைத்திலும் யோகா பற்றிய பதிவுகள் காணக்கிடைக்கின்றன. இடைக்கால, நவீன கால, தற்கால இலக்கியங்களிலும் கூட யோகக்கலை பற்றிக் காணப்படுகிறது. பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் (கி.மு.400) ஒழுங்குமுறைசார்ந்த மூல வாக்கியங்கள் என்று நம்பப்படுகின்றன. இவை பற்றிப் பல்வேறு உரைகளை உரையாசிரியர்கள் எழுதி உள்ளனர். அஷ்டாங்க யோகா என்று பிரபலமாக அறியப்படும் யோகாவின் எட்டு பாதைகளை பதஞ்சலி தந்துள்ளார். இந்த அஷ்டாங்க யோகா ஒரு தனி மனிதனின் அனைத்துக் கூறுகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது. யோகா மருந்தில்லாத ஒரு சிகிச்சை முறை. உடல் நலம் பேணும் ஒரு முறை, ஆரோக்கியமாக வாழ உதவும் முறை. உடல், மனம், ஒழுக்கம், உணர்ச்சிநிலைகள், ஆன்மிகக்கூறுகள் ஆகியவற்றை கொண்டுள்ளது. மிகவும் எளிமையாகப் பின்பற்றக்கூடிய பல எளிய ஆரோக்கிய வாழ்வியல் நடைமுறைகளை யோகா பரிந்துரைக்கிறது. இவை நல்ல உடல் நலத்திற்கும், நோய்களைத் தவிர்ப்பதற்கும் உதவக்கூடியவை. அன்றாட நடைமுறையில் வழக்கமான ஒன்றாக ஒருங்கிணைத்து மற்ற சிகிச்சைமுறைகளுடன் சேர்த்தும், அதற்குத் துணையாகவும் யோகாவை நடைமுறைப்படுத்த இயலும். உடலும் மனமும் சார்ந்த குறைபாடுகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான திட்டமாக குருமார்கள் பலரும், மருத்துவத் தொழில் முறையாளர்களும் யோகா வாழ்க்கை முறையை ஊக்குவித்துவருகின்றனர். யோகாப்பயிற்சிகள் நலவாழ்வு மேம்படவும், நோய்களைத் தவிர்க்கவும், உடல், மனம் சார்ந்த குறைபாடுகளை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும், உயர்நிலை பிரக்ஞையை சிறப்புற புரிந்துகொள்வதற்கும் இட்டுச் செல்கின்றன. யோகாவின் பிரபலமான பயிற்சி முறைகளில் கிரியா (தூய்மைப்படுத்தும் நடைமுறைகள்), சூரிய நமஸ்காரம், ஆசனங்கள், பிரணாயாமம் (மூச்சுப்பயிற்சிகள்), இறுக்கத்தளர்வு நுட்பங்கள், பந்தங்கள், முத்ராக்கள், தியானம் போன்றவை இடம்பெற்றுள்ளன. இதன் குறிக்கோள் அதனை அப்பியாசம் செய்பவர்களை விழிப்புணர்வு உடையவராக்கு வதேயாகும். உள்ளத்தால் ஏற்படும் இவ்வுணர்வு உடலையும் மாற்றத்திற்கு உட்படுத்துகிறது. உடலும் மனமும் மாற்றத்திற்கு உள்ளாகின்ற போது பூரண மனிதனாக அவனும் மாற்ற மடைகிறான். இம்மாற்றம் அறியாமையைக் களைவதனால் மட்டுமே ஏற்படுகிறது. விவேகத்துடன் இடைவிடாது பயில்வதே அறியாமையை ஒழிப்பதற்கான வழியாகும் என்பது பதஞ்சலி முனிவரின் சிந்தனை. இந்த விவேகமானது யோக அப்பியாசத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடியது. அறியாமை அகன்று, மனமாசு நீங்கி, உள்ளம் தூய்மையடைந்த நிலையில் புதிய பண்பாட்டுருவாக்கத்திற்கு யோக அப்பியாசங்கள் வழிசமைக்கும்.

உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமாக வாழ யோகா அளிக்கும் பலன்கள் ஏராளம். நாளமில்லாச் சுரப்பிகளைத் தூண்டி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், நேர்மறையான எண்ணங்களை வளர்க்கவும் யோகா நமக்கு உதவுகிறது. யோகா என்பது தன்னை உணர வைக்கும் கலை வடிவமாகும். ஒரு மனிதன் தாழ்வு மனப்பான்மையில் இருந்து மீண்டு ஆளுமை மிக்க ஒருவராக மாற துணையாக உள்ளது. இளைய சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மன அழுத்தங்கள், மன உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் போன்ற சமூகப் பிறழ்வுகளில் இருந்து விலகி ஆரோக்கியமான உடலமைப்பையும், உளநலத்தையும் மேம்படுத்துவதற்கு யோகா பெரும்துணையாக உள்ளது. முதியவர்கள் நாளாந்தம் தங்களால் செய்யக்கூடிய பயிற்சிகளை தவறாமல் செய்து வந்தால் உடல், உள ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். முதுமையில் தோன்றும் ஏக்கம், மனக்கவலை, மன

உளைச்சல், உடற்சோர்வு போன்றவை நீங்கி மகிழ்வுடன் வாழ யோகா உதவியாக இருக்கும். தொடர்ச்சியான பயிற்சிகளால் மனோதிடம் அதிகரித்து வாழ்வில் ஏற்படும் சிக்கலான சவால்களை எதிர்கொள்ளும் பக்குவ நிலை உருவாகும். உடற்பயிற்சி, உடல் தசைகளை மட்டுமே வலுப்படுத்தும். உடலின் உள்ளுறுப்புகளை வலுப்படுத்தவோ உறுப்புகளின் செயல் திறனைக் கூட்டவோ உடற்பயிற்சியால் முடியாது. உடற்பயிற்சியால் முடியாததை யோகாசனம் செய்யும். மேலும், ஒரு சமூகத்தின் ஒழுக்கமில்லாத கல்வியும் சரி, வளர்ச்சியும் சரி, அச்சமூகத்தினை வளர்ச்சியடைந்த நாகரிகமடைந்த சமூகமாக நோக்க முடியாது. தொழில்நுட்ப வளர்ச்சி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சிலரின் சுயநல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மனித மாண்பற்ற ஒழுக்க விழுமியங்களற்ற, உடலுள ரீதியாகப் பாதிப்பினைத் தருகின்ற செயற்பாங்குகளான முரண்பாடுகள், போட்டி, பொறாமைகள் வக்கிர சிந்தனைகள் சமூக விரோத நடவடிக்கைள மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் என ஒட்டுமொத்தத்தில் இயற்கையை விரோதிக்கும் செயல்களே வாழ்வாகிவிட்ட நிலைமையில் சமூகத்தின் உன்னத நிலைக்கு யோகத்தின் பங்கு காத்திரமானதாகும்.

உலகத்திலே அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது யோகம் ஆகும். ஏனெனில், உலக சமாதானமானது ஒவ்வொரு தனிமனிதனுள்ளும் நிலவும் சமாதானத்திலேயே தங்கியுள்ளது. அதாவது, ஒவ்வொருவரும் தத்தமது உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் இருளாகிய கோபம், வெறுப்பு, அவா, நிலையற்ற பொருள்களின் மீதான பேராசை, அறியாமை என்பவற்றை அகற்றினாலன்றி குடும்பத்திலேயும் சரி நாட்டிலும் சரி ஏன் உலகத்திலேயும் சரி சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்க மாட்டா. இவ்வகவிருளை யோக அப்பியாசம் செய்வதன் மூலமே நீக்கலாம் என்பர் பெரியோர். எனவே இப்பூவுலகில் தோன்றிய சித்தர்கள், முனிவர்கள், மகான்கள், ஞானிகள், யோகிகள் ஆகியோர் மனிதகுலத்திற்காகப் பல பொக்கிஷங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் இலக்கியம், வேதம், தத்துவம், தற்காப்புக்கலை, மருத்துவம் எனப் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்று அதனை மனிதர்கள் பயன்படுத்தும் வகையில் வரையறை செய்துள்ளனர். அத்தகைய துறைகளுள் சித்த மருத்துவமும் யோகக்கலைகளும் தற்போதைய காலச் சூழலுக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றன. மனித உடலும் உள்ளமும் வெகுகாலத்திற்கு நிலைபெறச் செய்ய உதவும் இவ்விரு துறைகளும் தற்போது பல்வேறு சமூகத்தினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்“ எனும் பழமொழிக்கொப்ப உடலுக்கு எந்தவொரு நோவும் ஏற்படாமல் பாதுகாத்து நிறைவான வாழ்க்கையை வாழ சித்தர்கள் தந்த வரமாக யோகக்கலை பெரும்பங்காற்றுகின்றது. நோயுற்று அவதியுறுவதைக் காட்டிலும் நோய் ஏற்பட முன்னே நம்மை மேம்படுத்திக் கொள்வதே தற்போதைய காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அறிவுக்கூர்மையான செயலாகும். அவ்வகையில் நோய்கள் பீடிக்காத வண்ணம் உடலையும் மனதையும் செம்மைப்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்ட யோகக்கலையானது மற்ற கலைகளைவிட மேலானது எனில் மிகையாகாது. இக்கலை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றினாலும், இயந்திர உலகத்தில் தற்போது மனிதர்கள் படும் பல்வேறு அவஸ்தைகளுக்கு இந்தக் கலை பெரிய மருந்தாக பயன்படும் அரிய பொக்கிஷமாக விளங்கும் இந்த சிறப்பு வாய்ந்த கலையை நாமும் நமது சந்ததிக்கு இப்போதே கற்றுக் கொடுத்தால், வருங்காலத்தில் அவர்கள் மனநிலையும், உடல் நிலையும் மிகுந்த ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

# Mavidapuram Kanthasamy Temple

## Sellappah Selvapaskaran

**Historical 8th Century Mavidapuram Kanthasamy Temple's Maha Kumbapishekam took place on Friday 11th April 2025 followed by Mandalaphisekham religious rites ceremony!**



Performing Maha- Kumbabhishekham and participating in 'Jeeranodharana' means the divine presence of the Murtis is transferred to the holy water contained in the Kalasha pot. It promotes peace and harmony among those who participate in the Maha Kumbabishekam.

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

Historical 8th century Mavidapuram Kanthasamy Temple built by Chola Princess Marutha puraveeka-valli, daughter of King of Mathurai Ukiraperuvaluthi. It was believed that Chola Princess had a facial deformity known as "Mandibulo-dysostosis and was said to have been advised by a sage to travel to Jaffna and meet Keerimalali Nagulamuni, a sage and he advised the Princess to take a bath in the Keerimalai Sacred Springs. After the Princess remained there repeating, her prayers to Nagulambika and Naguleseswara Swamy, her facial appearance changed and the Princess commenced the regeneration of an ancient shrine in "Koil Kadavai". The original name of Mavidapuram was after the "Parivaram", the members of the royal entourage and the devotees said the facial appearance of a horse had disappeared and the name of Koil Kadavai was changed. However, to the Princess's vision, the facial appearance persisted and she rushed back to Keerimalai to meet sage

Nagulamuni to get further advice. Sage consoled the Princess and said that “You failed to invoke the "Prime deity, Vigneswarar/ Pilliar prior to commencement of any initiatives. To seek the divine grace of Lord Pilliar which is absolutely necessary to protect from all obstacles (Vignams) and as a penance sage Nagulamuni advised Princess to construct some Pilliar temples. Princess Maruthapuraveeka-Valli settled her Parivaram in close proximity to the Mavai Kanthaswamy temple in 'Arasady Veethy near Maviddapuram Muthumari Amman temple.

The Parivaram who came in the entourage of Chola Princess, Maruthapuraveeka-valli are the clan of late Sangarapillai Sellappah teacher at Kollankaladdy Saiva-Vidyalayam and his brothers' ancestors' extended families who are regular devotees of Mavai Kandaswamy Temple. Princess's father, on hearing the divine miracle, sent statues of Kankeyan,Valli and Theivanai another form and name of Deities, architects; sculptors, granite stones, building materials, tools and equipments, gold, silver precious. Gems and metals. Chola king of Madurai Ukraperuvaluthi sent "Thillai val brahmin Dheeksithar" to perform poojas. It needs to be noted that supreme Lord Natarajar, when descending from Mount Kailash, brought 3,000 Brahmin Theedshirakal including himself to perform "Aradhana-Kramam" for him (Siva) performing Nithya-Aaradhana, a daily worship ritual to invoke Lord Siva according to Saiva agamas!

Maviddapuram Thevasthanam is famous for four aspects; Isthalam ( the place) Mavidapu ram, Moorthy (the presiding deity), Lord Kanthaswswamy, Theertham, Keerimalai springs; Virutcham (the tree), "Kanchima Mamaram". Maruthapuraveeka Valli planned to build seven (7) Pilliar temples and 1st Pilliar temple was built opposite Kollankaladdy Saiva Vidhya Salai and in Allveeddy (3) three Pilliar temples were built. While turning to the proposed site of Alaveddy Kumpalawella Chandrasekra Pilliar temple, the Chola Princess felt that a miracle had occurred and felt that her facial appearance had been evolved as a human face! A miracle materialised that she was happy as the facial appearance that of a horse vanished in thin air and the historical site was named as Maviddu Thiddy means, ma'-horse- Viddu-left-thiddy means a small sand mound. The Princess and Parivaram constructed a water pond - Kerni and named it Kumari-Theertham.

The secret of Mavidapuram Kanthasamy Thevsthanam for 800 years able to overcome the 1st and 2nd world wars implications, natural disasters, Covid-19 pandemic, 30 years of civil war, temples in Jaffna were razed to the ground by the Portuguese rulers, who issued edicts requiring that Cross signs should be displayed even in the turbans which people wore. It was against Christianity then, to use plantain leaves as eating plates. Killing of cows was considered an act of virtue.!!! Kantha-Puranam reading and explanations were disbanded. According to Pandithamany Kanapathipillai of Madduvil in his book titled "The decline and revival of Kantha-puranam in Ceylon!!!

The secret of the strength of Mavidapuram Kanthasamy Temple is to withstand with resilience; the ability to adapt to and recover from difficult situations and to maintain psychological well-being in the face of adversity. The secret is due to the descendants of Sithamparam Thillai Natarajar temple from the Founding High Priest Agama Sasthra Shironmany revered Periamanathular, Sithamparam, Sinnamanathullar, Subramaniya

Kurukkal 1927, who completed building the inner sanctum-sanctorum with granite stones and performed Maha-Kumbapishekam. Thuraisamy Dheedchithar, Shanmuganatha Kurrukkal, and the current, highly revered S. Ratnasabapathy Kurrukkal, all descendents of Sithamparam Thillaival Anthanar, dedicated religious rites is the secret of resilience of Mavai Kandasamy Temple for the past 800 years and marching victoriously to mark the 50th Maha Kumbabhiskham on Friday 11th April 2025.

In this context, it is vital to mention briefly the composition of Thirupugal means praise of Lord Murugan by the foremost among Acharyas of Kaumaram, which is one of the six cults of Hinduism. Thirupugal appealed to the majority of people due to its occult powers. For instance, the hymn "Sinnathavar Mudikum" is said to ward off evil powers, when narrated. Besides Tirupugal, Arunagirinathar has also written Kandar Anubuthi, Alankaram, Anthadi, Tiruvahuppu, Mayil-Viruttam, Vel Viruttum, Seval Viruttam, and Tiru Ezu Kootrirukai. Tripugazh had gained popularity during his time and continues to be popular. It attracts Scholars since it is a mine of social; religious, and literary wealth, the choice of words, innumerable analogies, and spiritual depth. Worship of Lord Kanthasamy is not confined to India and Sri Lanka but Lord Muruga worship is global. His name is sung in 126 nations out of 193 nations in the united nations. The final Aarathi event song " titled Subramanyam, Subramanyam Shanmuganatha Subramanyam, Subramanyam Subramanyam Subramaniyam Siva Siva Subramaniyam, Hara Hara Subramaniyam"; in internationally sung.

Lord Muruga is hailed as the bridge between India and Sri Lanka by the marriage of Murugaallamman in Katragama, glorious Vedda tribe women and millions of people flock to worship the Katragama deviyo. When KKS MP S Sivadasan presented the topic of Mavidapuram Kanthasamy Temple, in the year 1996, spoke that he was concerned personally about two temples. One was about the missing statue of Balaskanda from Keerimalai Nagulewaran Temple, damaged by the bombing. He quoted what we call the Kataragama and without any confrontation requested the deputy defence minister Anurudha Ratwatte to grant permission to visit the two temples. He not only happily gave permission to go with the devotees and start the restoration work. He said the minister of cultural and religious affairs has set up a committee to raise funds to restore the two Koyils and requested late Sivathasan MP an Upayakarar family member of Mavai-Kandan to coordinate with Lakshman Jeyakoddy. In my opinion the reference to the magical word "Kataragama Devio" was a miracle of Lord Muruga to conclude, we should not confine Tirupugazh to mere singing, writing, or in debates. On the contrary, we need to practice what is said in Kanthapuram written by Kachciappa Sivachariar and pass the knowledge of Muruga worship and its inner significance to our younger generation and adhere to Jaffna Kantapurana Kalacharam in the homeland and diaspora Saranam Sararanam Mavai Kandanuku Saranam!

"Sarvaloka Samastha Suginoor Bavanthu"

# சந்திரன் – திங்களூர் கோயில்

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

பயணக்கட்டுரை

சந்திரன்:
நவக்கிரகங்களில் இரண்டாவது இடத்தில் இருப்பவர். திங்கள், சோமன், மதி என்ற பெயர்களும் உண்டு. சிவபெருமானின் இடது கண் சந்திரன் ஆகும். சிவன் சந்திரனைத் தலையில் சூடி, சந்திரசேகரன் ஆகின்றார்.

ஒரு இராசியில் இரண்டரை நாள்கள் இருக்கும் சந்திரன் அமாவாசையிலிருந்து 15 நாள்கள் வரை வளர்பிறை ஆகி சுபகிரகமாகும்.
வெண்ணிற ஆடை அணிந்து சூரியனுக்கு தென்கிழக்கில் நவக்கிரகங்களில் இருப்பவர் சந்திரன். 80 வயது அடைந்தவரை ஆயிரம் பிறை கண்டவர் எனக் கூறுவர்.



"நீரின்றி அமையாதது உலகு
நிலவின்றி அமையாதது உலகு."

திங்களூர் கோயில்:
கைலாசநாதர் கோயில் தான் திங்களூர் ஆலயம். சந்திரன் கைலாசநாதரிடமிருந்து தான் சாபவிமோசனம் பெற்றதால் இது ஒரு பிரசித்திபெற்ற சந்திர பரிகார தலமுமாகும். மக்கள் திரள் திரளாகப் படை எடுத்து சந்திரனையே வணங்கி வழிபடுவர். இவற்றால் இக்கோயில் சந்திரன் கோயில் என்றே மக்களால் அழைக்கப்படுகிறது. தேவாரப் பாடல் பெற்ற சிறு கோயில் ஆதலால் பெருமை பெற்றது.

தலவரலாறு:
தேவரும், அசுரரும் அமிர்தத்தைப் பெறத் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அசுரர்கள் வாசுகியின் தலைப்பக்கத்திலும் தேவர்கள் வால் பக்கத்திலும் நின்றனர். ஆலகால விடம் வெளிப்பட்டது. சிவ பெருமான் தேவர்களைக் காப்பாற்ற அதை அருந்தினர். ஆனால், நஞ்சின் தாக்கத்தால் தேவர்கள் மயக்கம் அடைந்தனர். சந்திரன் அப்போது தேவர்களின் மயக்கத்தை நீக்கினார்.

அப்பூதி அடிகள் அவதரித்த இடம் இது. அடிகளார் திருநாவுக்கரசு நாயனாரின் பரமபக்தர். தமது பிள்ளைகளுக்கும், தண்ணீர் பந்தல் ஆகியவற்றுக்கும் அவர் பெயரையே வைத்தார். திருநாவுக்கரசு நாயானருக்கு அமுது அளிக்க அடிகளாரது மகன் வாழையிலை எடுக்கச் சென்றபோது அரவம் தீண்டி இறந்தார். நாவுக்கரசர் அவரது உடலை இவ் ஆலயத்திற்கு முன்னால் எடுத்துச் சென்று "ஒன்றுகொலாம்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாட, மகனார் விடம் நீங்கி உயிர் பெற்றார். இதனால் திங்களூரில் பாம்புப் பயம் இல்லை. பாம்புகள் ஒருவரையும் தீண்டதாம்.

இறைவன் - கைலாசநாதர்
இறைவி - பெரிய நாயகி.

மூன்று நிலைகள் அமைந்த, கிழக்கு நோக்கிய இராஜ கோபுரம். ஒரு பிரகாரம் உண்டு. பசுமையான மரங்கள் நிறைந்த சுற்றாடல். சோழர்களால் அமைக்கப்பட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திராவிட முறைப்படி அமைந்த கோபுரம்.

கைலாசநாதர் கோயில் என்ற பெயரில் இத்தலம் இருந்தாலும் மக்கள் திங்களூர் கோயில் - சந்திரன் கோயில் என்று அழைத்து, திரள் திரளாகப் படையெடுத்து சந்திரனை வழிபடுபவர்.

சந்திரன் கோயில் தனிச் சந்நிதியில் மேற்குத் திசை நோக்கி நின்ற நிலையில் வெண்ணிற ஆடையோடு இருக்கிறது.


ஸ்ரீ சந்திரன் பகவான்

அதிதேவதை - பார்வதி
மலர் - வெள்ளை அலரி, வெள்ளை அல்லி
ஆடை - வெண்ணிறம்
தானியம் - நெல் (பச்சரிசி)
நிவேதனம் - தயிர்ச்சாதம்
ராகம் - சாவேரி

விதியை வெல்ல மதி:
மனநிலை குன்றியோர், மன அழுத்தம், உடல் எதிர்ப்பு சக்தி அற்றோர் சந்திர திசை, சந்திர புத்தியால் பாதிக்கப்பட்டோர், கல்விநிலை மேம்பட, திருமணத்தடை, குழந்தை பாக்கியம், வெளிநாடு செல்ல எனப் பலவற்றுக்குப் பரிகாரத் தலமாக வணங்குவர்.
சந்திரன் மனதிற்கு அதிபதி - மனோகரன்

திங்களை, சந்திரனை வழிபட திங்கட்கிழமை சிறந்ததெனக் கருதி மக்கள் வருவதால் திங்களில் சன நெருக்கம் அடைவதுண்டு. தொடர்ந்து 7 திங்கள் அல்லது மேலும் சென்று சென்று தம் பிரார்த்தனை நிறைவேற வழிபடுவர். தீபம் ஏற்றி வழிபடுவது பிரபலம்.

“நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடி வா”

என்று பாடி, நிலவைக்காட்டி (சந்திரன்) குழந்தைக்கு சோறு - அன்னம் ஊட்டுவர். இந்த ஆலயத்தில் நடைபெறும் அன்னப்பிராசனம் பிரமிக்கும் பரிமாணத்தில் நடைபெறும். தமிழ் நாட்டில் இது முதன்மையானதும் தலைசிறந்ததுமாகும்.

இளங்கோவடிகள்:
இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் திங்கள் போற்றுதும், திங்கள் போற்றுதும் என சந்திரனை போற்றுகிறார். சுந்தரர் முதல் பதிகத்தில், “பித்தா பிறைசூடி” என இறைவர் தலையிற் பிறை சூடியிருப்பதைக் குறித்துப் பாடினார். ஞானப்பாலைக் குடித்த ஞானசம்பந்தரும் முதலே “விடை யேறியோர் தூவெண் மதிசூடி” எனப்பாடினார்.

பிரயாணம்:
மோட்டார் வாகனத்தை அமர்த்தி, மனைவியாரோடு ஆலயங்களைத் தரிசிப்பது எனது வழமை. மாலை 4 மணிக்கு முன்பே இக்கோயிலை அடைந்துவிட்டோம். அன்று திங்கட்கிழமை அமாவாசை நாளும் ஆகும். எமக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது - இறைவன் செயல் போலும். 4 மணிபோல் ஆலயம் திறக்கப்பட்டது. நாங்கள் உள்ளே சென்று அர்ச்சனைப் பொருள்களோடு, ஏனையோர் போன்று 9 தீபங்களும் பெற்றோம். சிறு ஆலயம், மரங்கள் சூழ்ந்தது.
மூர்த்தங்கள்:

லிங்கரூபத்தில் கைலாசநாதர் தனிச் சந்நிதியில் இருக்கிறார். பெரியநாயகி, விடம் நீக்கிய

பிள்ளயார், வள்ளி தெய்வானை சகிதம் சுப்பிரமணியர், தெட்சணாமூர்த்தி, கஜலக்சுமி, பைரவர், சண்டிகேஸ்வரர் யாவரையும் தனித்தனி சந்நிதிகளில் தரிசிக்கலாம்.

இங்கு நவக்கிரகங்கள் சற்று வேறுபட்டு நிற்கின்றன. சூரியன் நடுவில், இடது பக்கத்தில் சியாமளாதேவி, வலது பக்கத்தில் சாயாதேவியோடு நிற்க, ஏனைய எட்டுக்கிரகங்களும் சூரியனைப் பார்த்து நிற்கின்றன.

சந்திரன் கோயில் சென்றோம். தனிக்கோயில். நின்ற நிலையில் தென்கிழக்கு நோக்கியவாறு சந்திரன். ஒரு முதிய சிவாசாரியார் கூனிக்கொண்டு, குனிந்தபடி அபிடேகம் செய்தார். நீர், மஞ்சள், பன்னீர், பால், பஞ்சாமிர்தம், சந்தனம் ஆகியவற்றால் அபிடேகம் செய்தார். அலங்காரம் பிரமாதம். வெண் ஆடையில் கற்பூர ஆரத்தி. மிக ஆறுதலாகவும், வாஞ்சையுடனும், அன்புடனும் சந்திரனால் ஈர்க்கப்பட்டவர் போன்று பணிவாகவும் பக்குவமாகவும் மனப்பூர்வமாக பூசை செய்தார். இறைவனோடு ஒன்றிப் பூசை செய்தார். அவர் தற்போதும் என் மனக்கண் முன் நிற்கிறார். இந்தியாவில் இவர் போன்று பூசை செய்வதை ஓரிடமும் காணவில்லை. கூலிக்கு மாரடிப்பவர் இல்லை. இத்தகையான சிவாசாரியார்களை எமது கிராமத்தில் சந்தித்திருக்கிறேன். இவை யாவும் எனது குறிப்பில் உளது. அதில் மிக மிக ஆனந்தித்து, உணர்ந்து அருள் பெற்றோம் என எழுதியுள்ளேன்.

இவ் ஆலயத்தில் அப்பூதி அடிகளின் மனைவியார் அருள்மொழி, மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு, ஆகியோரின் உருவங்களும், பிறிதொரு இடத்தில் திருநாவுக்கரசு நாயனாரையும் காணலாம்.
பசுமையான சூழ்நிலையில் புண்ணிய பூமி, கடவுள் வாழும் இடம் கும்பகோணத்தில் இருப்பது. தினம் நான்கு காலப்பூசை.
கோயில் திறக்கும் நேரம்:


காலை நேரம்: 7 மணி - 1 மணி
மாலை நேரம்: 4 மணி - 9 மணி
அர்த்தயாமம் இரவு 8 மணி

கும்பகோணத்திலிருந்து - 34 கிமீ
சுவாமிமலையிலிருந்து -14 கிமீ
புகையிரத நிலையம் - தஞ்சாவூர்
விமானம் - திருச்சிராப்பள்ளி



எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடம் தீர்க்கும் சதுரா போற்றி.

# கலசம் கவல்கிறது



திரு கு சிதம்பரப்பிள்ளை அவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தில் ஒரு முக்கியமான உறுப்பினர். ஆயுட்கால உறுப்பினராக இருந்தவர். 1984இல் அங்கத்தவரான காலத்திலிருந்து நீண்ட காலமாகச் சங்கத்தில் பணியாற்றியவர். சங்கத்தின் சட்ட ஆலோசகராகவும், தலைவர், அறங்காவலர், சமூகச் செயலாளர் என்று செயற்குழுவில் பல முக்கிய பதவிகள் வகித்தும் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்.

சங்கத்துக்கென ஒரு பணிமனை அமைக்கவேண்டும் என்ற தீர்மானம் எடுத்தபோது மற்றைய செயற்குழு உறுப்பினர்களுடன் வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்துப் பணிமனை அமைப்பதில் பெரும் பங்காற்றியவர். தற்போதைய ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீ சிதம்பரேசுவரர் கோயில் அமைப்பதற்கும் நிதியளித்து உதவியவர்.

சமீப காலத்தில் உடல்நலம் குன்றியிருந்தபோதும் சங்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்றான இறுதிக் கிரியைகள் செய்வதற்குப் பெரிதும் உதவினார். சைவக் குருக்களை அழைத்துச் செல்வதோடு ஒழுங்கான முறையில் சடங்குகள் நடத்திவைத்தார்.

எதைச் செய்தாலும் எப்பொழுது செய்தாலும் எப்படிச் செய்தாலும் அதை ஒழுங்காகச் செய்யவேண்டும், தவறு இன்றிச் செய்யவேண்டும், குறைகள் வரக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக, அக்கறையுடன் செயற்பட்ட ஒரு மனிதர்.

இலண்டனிலுள்ள பல தமிழர்கள் அமைப்புக்களிலும் தான் கற்ற “ஹாட்லி” கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்திலும் தலைவராகவும், சட்ட ஆலோசகராகவும், அறங்காவலராகவும் பதவிகள் வகித்துப் பலருக்கும் உதவிய ஒரு பண்பாளர். இவ்வாண்டு ஜனவரி மாதம் அவரின் எண்பதாவது பிறந்த தினத்தை உறவினர், நண்பர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார். அவரின் சேவை தனக்குத் தேவை என்று இறைவன் நினைத்தான் போலும். 2025 ஜுலை மாதம் 31ஆம் திகதி அவரைத் தன் உலகத்துக்கு அழைத்துவிட்டான்.

மனைவி, வயித்திய கலாநிதி திருமதி மகேஸ்வரி, சகோதரர்கள், உறவினர்கள் அனைவரும் பிரிவுத்துயரிலிருந்து மீளவும் அவரின் ஆன்மா சாந்தி அடையவும் “கலசம்” குழு ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

# இம்மையும் மறுமையும்

இறைவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்தால் இந்த உலகத்திலேயே இன்பம் உண்டாகும்; மறு உலகத்திலும் இன்பம் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. இதைச் சொல்லவருகிறார் அருணகிரியார். முருகப் பெருமானிடத்தில் உண்மையான நம்பிக்கை வைத்து, தம்முடைய செயல்களை எல்லாம் ஒழித்து, "கந்தா, முருகா, குமரா, குகா என்று வெற்றிவேல் பெருமானின் நாமம் புகல்கின்றவர்கள் என்ன என்ன பயன்களை அடைவார்கள் என்று சொல்கிறார்.

முடியாப் பிறவிக் கடலில்
புகார், முழு தும்கெடுக்கும்
மிடியால் படிவில் விதனப்
படார், வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலம் அடங்கப்
பொடிஆக் கியபெரு மாள்திரு
நாமம் புகல்பவரே

பிறவி நீங்குதல்:

நம்முடைய பிறப்பு, முடியாமல் தொடர்ந்து வருவது. இதற்கு ஆரம்பம் இல்லை; அந்தம் இல்லை. இறைவனை நம்புகிறவர்கள் முடிவில்லாத இந்தப் பிறவிக் கடலுள் புக மாட்டார்களாம்

"முடியாப் பிறவிக் கடலில் புகார்"

நன்றி: கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்
திரு கி வா ஜ







"சுப விசேஷங்களின் சுவை என்றும் உங்கள் உணவகத்தில்"

VEENAS VIRUNTHU

உங்களின் அனைத்து விதமான நிகழ்ச்சிகளுக்கு தரமான முறையிலும், மிக குறைந்த விலையிலும் உணவு செய்து தரப்படும்

WE ACCEPT ALL TYPE OF PARTY ORDERS

LET'S ORDER

PH : 075 1999 3999 | 020 3500 9000

69 High Street Barkingside IG6 2AF, UK | www.veenasvirunthu.com



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881










சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் “சிவயோகம்” அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும் உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்...**

உங்களின் **£100** பங்களிப்பு

பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....

இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

**on Your Birthday, Wedding Day**

**Remembrance Day**

**or Any Other Special Function**




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**



J
SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவெல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### அக்டோபர் (03-10-2025) தொடக்கம் ஜனவரி (03-01-2026) வரை

| | | |
|---|---|---|
| *04.10.2025* | சனி | சனிப்பிரதோஷம் |
| *05.10.2025* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| *11.10.2025* | சனி | புரட்டாதி கடைசிச் சனி |
| *18.10.2025* | சனி | சனிப்பிரதோஷம் |
| *20.10.2025* | திங்கள் | கேதாரகௌரி விரதம் பூர்த்தி, தீபாவளி |
| *22.10.2025* | புதன் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| *27.10.2025* | திங்கள் | சூரசங்காரம் |
| *28.10.2025* | செவ்வாய் | திருக்கல்யாணம் |
| *03.11.2025* | திங்கள் | பிரதோஷம் |
| *17.11.2025* | திங்கள் | பிரதோஷம், முதற் சோமவாரம் |
| *02.12.2025* | செவ்வாய் | பிரதோஷம் |
| *03.12.2025* | புதன் | திருக்கார்த்திகை விரதம் |
| *05.12.2025* | வெள்ளி | விநாயகர் விரதாரம்பம் |
| *17.12.2025* | புதன் | பிரதோஷம் |
| *25.12.2025* | வியாழன் | திருவெம்பாவை, கொடியேற்றம் |
| *25.12.2025* | வியாழன் | விநாயகர் விரதம் நிறைவு |
| *02.01.2026* | வெள்ளி | தேர்த் திருவிழா |
| *03.01.2026* | சனி | ஆருத்ரா தரிசனம், நடேசர் அபிஷேகம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை
மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# Saiva Munnetta Sangam (UK)

*“Community Service Through Saiva (Hindu) Concern”*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |
| Post code | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed ‘Gift Aid’, I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## நிலையாமை

Instability (Delusion)

அதிகாரம்: 34 Chapter: 34
குறள்: 334 Kural: 334

நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்

பொருள்: நாள் என்பது, ஒரு குறிப்பிட்ட கால அளவு போல நமக்குத் தோன்றினாலும், உண்மையில் அது நம் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்துச் செல்லும் கூர்மையான வாள் என்பதை அறிவுள்ளவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

Meaning: Time, which shows itself (to the ignorant) as if it were something (real) is in the estimation of the wise (only) a saw which cuts down life

மிகப்பெரிய துறவி ஒருவர், தனது சீடர்களில் ஒருவன் துறவு பற்றிய உணர்வு இல்லாமல் இருப்பதைக் கண்டார். துறவு என்றால் என்ன.... வாழ்க்கை என்றால் என்ன.... என்பதை அந்தச் சீடன் அறிந்து கொள்வதற்காக அவனை மாமன்னர் ஜனகரிடம் அனுப்பி வைக்க எண்ணினார்.

சீடனுக்கோ ஆச்சரியம். "குருவே! நீங்கள் மிகப்பெரிய துறவி. சற்குரு. அவரோ நாடாளும் மன்னன். குடும்பஸ்தர் அவரிடம் நான் கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

"நாம் சந்நியாசி. அவர் குடும்பஸ்தர் என்பதற்கப்பால், அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உண்டு. பணிவோடு தலை வணங்கி அதைக் கற்றுக்கொண்டு வா" என்று சொல்லித் துறவி அவனை அனுப்பி வைத்தார்.
சீடன் மிதிலைக்குச் சென்றான்.

அரண்மனைக்குள் அழகான இளம் பெண்கள் நடனமாட, ஆடல்பாடல் எல்லாம் நடந்து கொண்டிருக்க, அவர்களிடையே ஜனகரும் அமர்ந்திருந்தார். இவற்றையெல்லாம் பார்த்த சீடனுக்கு அது பிடிக்கவில்லை.

ஜனகர் சிரித்துக் கொண்டே அந்தச் சீடனிடம், "இவற்றையெல்லாம் பார்த்து, ஒரு தவறான ஒரு முடிவுக்கு நீ வந்துவிடாதே ..... ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்ளவே குரு உன்னை அனுப்பி

வைத்தார். அதை மட்டும் கற்றுக்கொள். ஒருநாள் இந்த அரண்மனையில் தாங்கி இருந்துவிட்டுப் பிறகு நீ போகலாம்” என்று கூறினார்.

அரண்மனையில் ஓர் அறையில் சீடன் தங்கினான். அது மிகவும் அழகான - ஆடம்பரமான ஒரு அறை. விருந்து முடிய, சீடன் தூங்குவதற்காகப் படுக்கையில் சாய்ந்தான். மேலே பார்த்தபோது திடுக்கிட்டான்.

தலைக்கு மேலே, அறை முழுவதும் மெல்லிய நூலில் கட்டப்பட்ட கூர்மையான வாள்கள் - அதுவும் உறையற்ற வாள்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஏதாவது ஒரு வாள் அறுந்து தனது கழுத்தில் விழக்கூடிய ஆபத்தான நிலையில் இருந்ததைக் கண்டு, இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. வாள்களையே கவனித்தபடி இருந்தான்.

பொழுது விடிந்தவுடன் ஜனகர் வந்தார். “எல்லாம் வசதியாக இருந்ததா?” என்று சீடனிடம் கேட்டார். “எல்லாம் வசதியாகவே இருந்தது .... ஆனால், தலைக்கு மேலே கூரிய வாள்கள், அதுவும் உறையில்லாத வாள்கள் தொங்கிக் கொண்டிருக்க, நான் எப்படி அமைதியாக உறங்க முடியும்?” என்று அவன் பதில் சொன்னான்.

“நீ வரும்போது களைப்பாக இருந்தாய். படுத்தவுடன் அசதியில் தூங்கியிருக்கலாம். ஆனால், ஏன் தூங்க முடியவில்லை? வாள் அறுந்து தலை மீது விழுந்தால் என்னாகும் என்ற பயம் இரவு முழுவதும் உன் சிந்தனையில் இருந்தது. இதனால் நீ விழிப்புணர்வோடு, இந்த உலகம் - அதன் சுகதுக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல். வாள் மீதான எச்சரிக்கையுடன் இருந்தாய் அல்லவா?” என்றார் ஜனகர்.

“மற்றச் சிந்தனைகள் எதுவும் இல்லாமல் இருக்கக் கூடிய இந்த மனம் தான் துறவு. இதுவே உனக்கு நான் தரும் போதனை. நான் அரண்மனைக்குள் இருந்து கொண்டும், அங்கே பல விதமான கேளிக்கைகள் நடந்து கொண்டிருந்த போதும், இவற்றுக்கு நடுவே நான் சிந்திப்பது, எனக்கு மேலே இருக்கின்ற அந்த உறையில்லாத வாள் - அதாவது மரணம் - பற்றி மட்டும் தான்.

வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. மரணம் எந்த நேரத்திலும் நிகழலாம்.... அதைப் பற்றிய விழிப்புணர்வுடன் நான் இருப்பதால், இந்த அரண்மனைக்குள் வாழ்ந்தாலும் கூட, நான் ஒரு துறவிதான்” என்று கூறிய ஜனகர் அந்தச் சீடனுக்கு விடை கொடுத்தார்.

Once, there was a saint, who noticed that one of his disciples seemed to be without any concern about renunciation.

To make him know what renunciation is, what life is, that saint wanted to send him to Janakar, the great king.

The disciple got surprised. ‘My Lord! You are a great saint and also a true Guru… Janakar is a king and also a family man. What is there for me to learn from him?’ he asked.

Saint replied.

‘Apart from the fact that we are saints and he is a family man, there is something you need

to learn from him… head bow him, learn the matter, and come back' and sent the disciple to Janakar.

The disciple went to Mithila.  On entering the palace, he found many young girls dancing along with some fun making songs. King Janakar also was among this crowd.

On seeing this, the disciple was shocked and found it difficult to accept  it.

Janakar laughed at him and told, 'Do not take anything wrongly that are happening here. You have been sent here by the saint only to learn something particular. It's better you learn it. You stay here in the palace for a day and then you can return'.

The disciple was given a room which was very beautiful and luxurious.  After the feast had finished, he laid down on his bed to sleep. On lying down, disciple got shocked to see very sharp  swords attached to thin twines that were hanging from the ceiling of the room above his head! He got frightened and couldn't sleep.  The whole night, being  aware of those swords, he thought any sword above, without any cover – might fall on him and kill him.

Janakar came to him in the morning and asked 'was everything comfortable?'

'Everything was comfortable, except for the sharp swords without any safety cover, hanging above my head. How could I sleep peacefully in such a situation?' was the disciple's reply.

"You were very tired, when you came here. You would have slept well. But you didn't sleep a bit you say."

This shows that, without any concern about the world and other things around you, you only had worries about those swords which might fall on you and thereby couldn't sleep. Well! a mind without any other concern but only fearing of certainity of death and identifying the 'sword' filing life bit by bit is the reality of life would be the best to follow renunciation.

Even though I remain in my kingdom, among all kinds of fun and activities, I always think about the certainity – the death.

Life is like a water bubble. Death might occur at any time. I am aware of this reality and thus, I am also an actual saint'.

On knowing the reality of life, the disciple returned to his  place.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிழிந் தற்று

பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது. அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

# முத்தான முதுமை

சுகந்தி இந்துசேகரன்

உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களும் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து இறக்கின்றன. இவை அனைத்திலும் மனிதனுக்கு மட்டுமே சிந்தனை என்கின்ற நன்கொடையை இறைவன் தந்தருளியுள்ளான். இதனால் மனிதன் மற்றைய உயிரினங்களில் இருந்தும் வேறுபடுகின்றான். மானுடனாகப் பிறந்துவிட்டால் மாற்றம் வருவது இயற்கை.

இவ்வுலகிலே மானுடனுக்கு "அன்பு செய்தல் மட்டுமே தொழில்" என்று அறிவுறுத்தினான் பாரதி. அன்பினால் கட்டுண்டு உறவுகளால் பின்னிப்பிணைந்து இன்புற்று வாழ்வதே மனித வாழ்க்கை .

இவ் வாழ்க்கையானது நான்கு படிநிலைகளைக் கொண்டுள்ளது.

அவையாவன:

1. பிரமசரியம் - மாணவப் பருவம்
2. கிருகஸ்தம் - இல்லற வாழ்வுப் பருவம்
3. வானப்பிரஸ்தம் - கடமைகள் முடிந்து தவ வாழ்வு
4. சந்நியாசம் - வாழ்வின் இறுதிநிலை - துறவு

என்பனவாகும்.

குழந்தை பிறந்து வளர்ந்து பெரியவனாகிப் பின் முதுமையடைகிறது. வயதான காலத்தில் மனிதனின் உடலில் தோன்றும் மாற்றங்களும், நோய்களும், முதுமையால் மட்டுமன்றி, அவன் சிறு வயதிலிருந்தே கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் ஆகியவற்றால் தான் ஏற்படுகின்றன. உடல் இயக்கங்களின் ஒத்துழைப்பு இன்மையினால் தொடங்கி, மரணம் வரை நிகழக் காரணமாக உள்ள காலச் சக்கரமே "முதுமை" எனப்படுகிறது. முதுமை திடீரென வருவதில்லை. காலம் செல்லச்செல்ல அது கதவைத் தட்டிக் கொண்டே இருக்கும். எவ்வளவு புகழ் பெற்றவனாக இருந்தாலும், வாழ்வின் உச்சத்தைத் தொட்டவனாக இருந்தாலும் முதுமை அடைந்துவிட்டால் அவனை ஒரு "சராசரி மனிதனாக" மாற்றிவிடும். முதுமை இயற்கை வளர்ச்சியின் ஒரு முறைமை; வாழ்வின் மாற்ற முடியாத ஒரு பகுதியாகும். முதுமை தவிர்க்க முடியாதது.

ஆண்டொன்று போனால் அகவை ஒன்று போகும் என்பது எவ்வளவு உண்மையோ, அதேபோல, அநுபவச் சுரங்கமாகவும், அறிவுப் பெட்டகமாகவும் இருப்பவர்கள் முதியவர்கள் என்பதும் உண்மை. வார்த்தைகள் தடுமாறினாலும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் முதியோர்.

"மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்" என்பது பழமொழி. முன் கசந்து பின் இனிக்கும் நெல்லிக்கனியைப் போன்றது மூத்தோர் வார்த்தை.

வழமையாக வயோதிபத்தில் செழிப்பாக, இனிமையாக, இன்பமாக வாழ முடியாது என்கின்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால், முதுமையிலும் வழமையாக, இனிமையாக வாழ முடியும்

என்பது உண்மை. ஏனெனில், மூப்பு எய்தும் பொழுதுதான் யதார்த்தத்தை உணர முடிகிறது. இன்றைய பொழுதை இனிமையாகக் கழித்தால் போதும், நாளைய பொழுது இறைவன் கையில் என்கின்ற நிதர்சனமான உண்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளது "முதுமை" என்றால் மிகையாகாது.

"எதுவும் இல்லாமல் பிறந்து
எல்லாம் வேண்டுமென அலைந்து
எதுவும் நிரந்தரமில்லை எனத் தெரிந்து
உயிரும் சொந்தமில்லை என உணர்ந்து
உலகை விட்டு ஒரு நாள் பிரிந்து செல்வதுதான்
மனித வாழ்க்கை!"

என்கிறார் பட்டினத்தடிகள்.

மனம் என்பது எண்ணங்களின் சேர்க்கை. "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டாம்" என்பது சான்றோர் வாக்கு. மனிதன் தன்னை உணரும் போது மாமனிதனாகிறான். இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் மனித இயல்பு. நீண்டகாலம் வாழ வேண்டும் என நினைப்பவர்கள் தள்ளாடும் முதுமையுடன் வாழ விரும்புவதில்லை. இளமையில் கழித்த கடந்த கால நினைவுகளே முதுமையின் கனவுகளாகின்றன. முதுமையின் வழிமுறையை இளமையில் எடுத்துக் கொண்டால் மட்டுமே "முதுமை" சிறப்பாக அமையும். தாங்கிப் பிடிக்கத் துணை இருந்தால் தள்ளாடும் முதுமையும் இளமையே.

அன்றைய காலத்து முதியவர்களிடையே காணப்பட்ட அந்நியோன்னியமான அன்பு தற்போதுள்ள சமுதாயத்தில் குறைந்து கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அன்றைய முதுமைக் காதல் பற்றிய பாரதிதாசன் பாடல்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது சாலச்சிறந்தது. வயதான முதியவர் ஒருவரைப் பார்த்து இந்தத் தள்ளாடும் வயதிலும் வயதான மூதாட்டியான அவரது துணைவியாரிடம் உள்ள காதல் எப்படிக் குறையாமல் அதே அன்பு இப்பொழுதும் உள்ளது என ஒருவர் கேட்ட போது பதில் கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

புதுமலர் அல்லள் காய்ந்த புற்கட்டே அவள் உடம்பு !
சதிராடும் நடையாள் அல்லள் தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம் அவட்கு! வறள் நிலம் குழிகள் கண்கள்!
எது எனக்கு இன்பம் நல்கும்? இருக்கின்றாள் என்ப தொன்றே!

"அவள் இருக்கிறாள்" என்பது ஒன்றே என்று ஒரு பெரியவர் பதில் கூறியதாகப் பாரதிதாசன் எழுதுகிறார். (குடும்பவிளக்கு என்னும் நூலிலிருந்து)

இதே கேள்விகளுக்குப் பெண்ணின் (மூதாட்டியின்) பதிலாக அமைவது இப்பாடல்

"அறம் செய்த கையும் ஓயும்!
மக்களை அன்பால் தூக்கிப்
புறம் போன காலும் ஓயும்!
செந்தமிழ் புலவர் சொல்லின்
திறம் கேட்ட காதும் ஓயும் !
செயல் கண்ட கண்ணும் ஓயும்!

மறவனைச் சுமக்கும் எந்தன்
மனம் மட்டும் ஓய்வதில்லை.”

என்று உள்ளக் காதலை உணர்த்துகிறாள் மூதாட்டி

.

நான் இதயத்தை இயக்குகிறேன். நான்தான் மூளையை இயக்குகிறேன். நான் தான் பொழுதினை விடிய வைக்கிறேன் என்று சொல்ல முடியுமா? அவை அனைத்தையும் யாரொருவன் இயக்கு கிறானோ, அவனுக்கு மட்டுமே “நான்” என்று சொல்லும் அதிகாரம் உண்டு. அவன் தான் எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருளாகிய இறைவன் “நான்” என்பது அகந்தை. “நாம்” என்பது உணர்வு.

உணர்வுகளின் அடிப்படையில் நாம் வாழும் போது, நம் உணர்வுகளுக்கு முதுமை கொடுக்காமல் நம்மால் மகிழ்ச்சியாக வாழ முடியும். மகிழ்ச்சி, அறிவு, ஞானம் என்பவற்றுக்கு மூப்பு என்பதே இல்லை. “கிழவேடன் வலை விரிப்பதில் கெட்டிக்காரன்” எனும் பழமொழிக்கு இணங்க, பல விஞ்ஞானிகள் தமது “முதுமை”க் காலத்தில் சாதனை படைத்துள்ளான். முதுமையுடன் கழியும் வாழ்க்கை முழுமையடைந்து இறைவனைச் சென்றடைய வேண்டுமானால், நெஞ்சமே நான் சொல்வதைக் கேள்! என்கிறார் அப்பர் சுவாமிகள்.

அப்பர் பாடல்:

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டிற்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டிற்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டிற்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே!

திரு 6 ப 31 பா 7

என்று நெஞ்சமே கேட்பாயா என அறிவுறுத்துகிறார் அப்பர் சுவாமிகள்.

முதுமை என்று எதுவுமில்லை.
நோய் என்று எதுவும் இல்லை
இயலாமை என்று எதுவும் இல்லை

எல்லாம் எம் மனதிலும், அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கின்றது. ஆடுகிற ஆட்டமும், ஓடுகிற ஓட்டமும் ஒருநாள் ஓயும் போது, கூடுகிற கூட்டம் தான் சொல்லும் “நீ” யார் என்பதை, என்கிறார் பட்டினத்தார். எனவே நான் என்கிற அகந்தையை விட்டு எல்லோரிடத்தும் அன்பாக இருப்போம். முதுமை, வயதைத் தொலைத்ததாக எண்ணாமல், வயதைத் தோற்கடித்ததாக எண்ணி,

“முத்தான முதுமையை நேசிப்போம்.
சிந்தனையை மாற்றுவோம்
ஆரோக்கியமாக வாழ்வோம்.”

# SAIVA SCHOOL OF HINDUISM

## (By late S. Shivapathasundaram B.A)

## CHAPTER 5

# AANAVA (ஆணவம்)

**The Nature of Aanava:**

***What is he cause of evil?***

The cause of evil is one of the great problems of life. The statesman and the priest, the teacher and the parent are engaged in finding out and removing the cause of evil. Different evils are known to have different causes. But it is the ultimate cause of evil that philosophy tries to discover so as to get at the power that can couteract it and serve as the panacea of al evils.

***Are desires the cause of evil?***

Some desires are good and others are bad. It is the bad desires that usually causes evil. Besides, desires are not ultimate causes. For example, a man desires to steal another man's money. This desire is the effect of the desire to obtain something he needs, say food, which in turn is caused by the desire to avoid hunger. The ultimate desire is the desire to avoid pain. Pain is a relative term. One man's pain is another man's pleasure. There are some who find pleasure in starving if they can give their food to others in need. Pain being thus indefinite, the desire to avoid pain is also indefinite. To say that the ultimate cause of pain is an indefinite thing is to admit ignorance. Besides, desiring is an act and as such it is an effect. An effect cannot be an ultimate cause. Therefore, desire cannot be an ultimate cause.

***Is selfishness the cause of evil?***

Selfishness is the desire of an individual to make himself happy even at the expense of others. Being a desire, it too cannot be an ultimate cause.

***Is ignorance the cause of evil?***

Ignorance is merely absence of knowledge and is not a thing that has positive existence. It is absurd to speak of a non-existing thing as a cause. We hear of acts performed out of ignorance. But these statements are the result of loose thinking. A child is said to have put its hand into fire because it did not know that it would burn. The fact is that the child thought that the fire was a beautiful thing and wanted to take it. The real cause is its desire to reach beautiful things. Wrong knowledge may be a cause but not ignorance.

### *Saiva view of evil*

Saiva philosophy cuts the Gordian knot by denying the very existence of evil. If A murders B, it is good for A and B. God is the director of the universe, and under His rule nothing untoward can happen. When A murders B, the latter gives up the body and gets a more suitable body. A suffers for the murder and gains wisdom, foresight, and mental balance, or will throw off the present body for a fresh one. The dependents of A and B also will become wiser and more self-reliant. But, though Saiva philosophy denies the existence of evil, society not only affirms its existence but works for its eradication.

This amazing difference between religious philosophy and social philosophy is due to the fact that the reality with which religion is concerned is the soul, whereas that of society is the body and worldly possessions. What society calls evil is not non-existent but is the "error or wrong" in philosophy, which is a far more innocent thing. If we wish to find out the ultimate cause of wrongdoing, we can do so by examining a few instances of it.

### *The existence of Anava*

If the murder of B by A is a premeditated act, A must have thought that B had no right to live in this world because he had wronged either him or some of his friends or his country. This thought is the result of insufficient knowledge and wrong reasoning, as neither A nor anyone else has the ability to form a correct judgment regarding B's right to live in this world.

If the murder followed an exchange of words or blows, it was committed in a rage when the mind was incapable of forming correct judgements. Here the cause of murder is insufficient thinking.

If the mind was not clouded by anger, the murder might have been due to a weak will which could not prevent him from the act. The murder might also have been avoided, if A had taken prompt action to defend himself by some method short of murder. He was not able to take such action owing to lack of sufficient energy. So the murder is traced to insufficiency either of knowing, willing, or doing.

We have attributed to the soul the ability for these three activities. The soul then would function correctly if it received sufficient energy.

The supply of energy comes from Maya, which freely offers all that the soul wants. Hence, there must be a slip between the cup and the lip. The allowance is sufficient, but the whole of it does not reach the soul.

Therefore, there must be a third factor involved in the process which blocks the passage and prevents the full flow of the energy that is offered. This something requires a name, and Saiva Philosophy calls it Anava.

### *What is Anava?*

It is a significant name derived from the word “Anu” which means an atom. Anava therefore means that which tends to make the soul's powers indefinitely small.




What Anava is, is a matter of great dispute. Some attribute the limitation or the imperfection of man to the soul's tools, the mind and the body. These tools are given to us by God’s love. It would not offer such imperfect gifts unless they were good for us.

These could not be good for us if the soul had no limitation, if the soul had been unconditioned and perfect. A perfect soul requires a perfect body and mind or none at all. God's Love would not give an impotent inellect to a soul whose capacity for knowledge is perfect. Therefore some direct limitation of the soul's powers must be postulated to justify the gift of the body and mind with limitations.

Others attribute the limitation to the soul itself and regard it as an essential quality of it. But we know that when an essential quality of a thing disappears, the identity of the thing itself disappears. Suppose a loosely jointed framework of four equal rods is placed so that one of its angles is a right angle. The rods then form a square. But a slight push or pull at a corner robs the framework of the right angle and hence of its square form. Along with the disappearance of this essential quality, namely rectangularity, also disappears the square which possesses the quality.

So, if the limitation is an essential quality of the soul, when it disappears, the soul also must disappear. In reply to this objection, it may be said that the soul as soul does disappear and becomes God. But if one substance becomes another, one of the two must be a complex entity formed of the other by the addition of a third substance.

For example, iron becomes rust by combining with the third substance, oxygen. But, as both God and Soul are eternal, neither of them can be complex (corollary I). Besides, if souls should become Gods, there would be many Gods, each of them directing the universe. Such a conclusion is prima facie an absurdity. Again, since the soul is eternal, its essential attributes also must be eternal.

It would follow, therefore, that its limitation must also be eternal and the soul could never be free from them, and that evolution would be futile.

### *The Effect of Anava on Action*

We have given the name Anava to that entity which blocks the passage of the energies to know, to desire, and to do.

### *Misapprehension*

Let us consider the condition of the soul's ability to know. Anava prevents the soul from knowing the whole truth and thereby causes misunderstanding. Just as in the dark, for want

of sufficient light, a man mistakes a rope for a serpent, so the soul, in the insufficient knowledge received by it, conceives things to be different from what they are, and blunders at every turn.

### *Non appresension*



Its first and foremost blunder is the identification of itself with the body or mind. It does not see its own vast potentiality, the eternal brotherhood of souls, and its absolute dependence on God. It is aware only of things it can perceive with the senses, seeks pleasure as the summum bonum of life, and makes the search after it its all-absorbing occupation. Each ego, while engaged in this work, sees other egos interfering with its desires, and carries on a perpetual warfare against them. This fosters the feelings of I-ness and My-ness. I-ness consists in setting a special value on oneself and in applying one law for one's own self and a different law for others. My-ness similarly sets a special value on one's own possessions, sentient or insentient, such as relations, friends and property.

The feelings of I-ness and My-ness are the cause of the majority of our wrong deeds. There are also other channels of wrongdoing which, as we have already seen, proceed from the insufficiency of energy caused by the constriction of the soul's capacity by Anava.

### *The Effect of Wrong Action on Anava*

Anava leads a soul to wrong doing. Every wrong is ultimately followed by the experience of pain. The experience of suffering that follows it, forces itself into the soul's stock of knowledge. The painful consequesnces of an act are either immediate or remote.

If a thief is caught, he receives immediate punishment. Otherwise, he suffers later in some other connection. If a person has had immediate suffering as a result of yielding to temptation and doing something wrong, he tries to avoid this suffering thereafter even if he is not able to resist the temptation. For a time he escapes, but later he is caught. Then comes the desire to avoid the wrong.

But the suffering is not remembered in its full intensity after some time, and the desire to commit the wrong act in a fresh set of circumstances proves stronger than the desire to avoid it and ends in the commission of the act again. In this way the wrong is repeated and becomes a habit.

Once an act has become a habit, the external stimulus acts almost automatically and brings about the act with little expenditure of mental energy. It gives no time for the consideration of an earlier decision to avoid it. But suffering is also repeated, and the time comes when the suffering is unbearable.
This is the turning point in the curve of wrongdoing. The person realises that the wrong act ought to be avoided, and a strong desire arises to avoid such wrongdoing. This becomes stronger with each repetition of it. The act is then altogether given up. The constriction of the

three capacities is then overcome, though only to a small extent. In some cases, if a particular form of wrongdoing is overcome, some allied forms also are given up. A person who has obtained so much real knowledge and enlightenment as to avoid theft may give up cheating and lying also.

***How does suffering help?***

1. Knowledge

Two questions may now arise. The first is whether the suffering is indispensable to the avoidance of wrong-doing. We see that when the heinousness of an offence is clearly explained, the knowledge alone is, in some cases, enough to prevent a person from wrongdoing. He does not wait for the experience of the suffering that would result from it. But mere knowledge, however clear it may be, cannot sufficiently prevail on man to change an attitude which is the result of persistent tendencies. These can be attacked only by experience. If we see a man give up wrongdoing as the result of a sermon, he is either in the earliest stage when the impulse is weak or is in the last stage mentioned in the last paragraph.

2. Fear

Besides knowledge, fear also serves to prevent the commission of an offence. Hell-fire was invented by many religions for this purpose. Saivism posits the existence of a mental state of agony called Naragam, which corresponds to hell. It is a magnified form of an unpleasant dream, but is not a place. But the disadvantage of fear is that when a man begins to disbelieve or to forget the existence of such horrors he may plunge into wrong doing, and once he starts he is likely to continue along that path. Physical indisposition, too, sometimes helps to avoid temptation; but, as in the case of fear, its effect is temporary. The experience of suffering is necessary for the complete removal of the tendency to do wrong.

The second question is whether pain and suffering have any effect if they are experienced long after the commission of the offencc that occasioned them. It may be contended that the offence itself may be forgotten, or, even if it is remembered, the causal relation between it and the suffering may not be known. But remembering and forgetting are phenomena only of the conscious mind. In the subconscious mind all past impressions are retained never to disappear completely. Therefore it is possible for the soul to connect the wrong with its painful consequences. Besides, the pain by itself might be a means of making the soul act more righteously thereafter.

# கலியுக தெய்வம் கந்தனும் கந்தசஷ்டி விரதமும்



திரு க செல்வரத்தினம்

திருமுறைப் பாடல்கள் மந்திர ஆற்றல் கொண்டவை. திருமுறைகளை நாயன்மார்கள் நமக்கு வழங்கியபடியால் நாம் அவற்றை ஓதி, ஊழ்வினையில் இருந்து விடுபட்டுப் பிறவிப் பயனை அடையவேயாகும். தமிழர்கள், குறிப்பாக ஈழத்தமிழர் கந்தப்பெருமானுக்குப் பல தலங்கள் அமைத்து - நல்லூர்க் கந்தன், மாவிட்டபுரம், சந்நிதி முருகன், கதிர்காமக்கந்தன் - எனப் பல தொண்டுகள் செய்கின்றனர். இன்றும் ஈழத்தமிழர் கதிர்காம முருகனை நோக்கிப் படையெடுக்கினறனர்.

நாவலர் பெருமான் காலத்தில் இருந்தே சமய உணர்வு வலுப்பெறத் தொடங்கியது. தெய்விக அற்புதங்களை நாம் ஆங்காங்கே கேட்டிருக்கின்றோம். திருச்செந்தூர் இலைப் பிரசாதம் நோய் தீர்க்கும் அருமருந்தென கொள்ளப்படுகிறது. வேற்று மதத்தவரும் முருக வழிபாடு செய்து வருகின்றனர். நல்லூர் சித்தர்கள் ஞான பரம்பரைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

“கந்தனைப் போற்றுவோர் மேல் காலனும் அணுகொணாதே” எனக்கூறப்படுகின்றது.

“தீயவை புரிந்தாரேனும் குமாரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்” என்பது கந்த புராணம்

ஆலய வழிபாட்டின் அவசியத்தைப் பாசுரங்கள்மூலம் ஞானிகள் தந்தருளினர்

நல்லாய் எனக்கு மனுவொன்று தந்தருள் ஞாலமிலாப்
பொல்லா எனக் கொன்று போடும் பொழுதியல் பூசை செபஞ்
சொல்லார் நற் கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லாம் முடிந்த பின் கொல்லுகண்டாய் கச்சி ஏகம்பனே

- பட்டினத்தார்

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்

- கந்தசஷ்டி கவசம்

கந்தனுக்கு வேர்க்குமா?

1803இல் தமிழ் நாட்டு திருநெல்வேலியில் கலக்டராக இருந்தவர் லூசிங்டகன் என்னும் துரை. திருச்செந்தூர் முருகன் கோயில் வசந்த மண்டபத்தில் பக்தர்கள் ஆறுமுகப் பெருமானுக்கு விசிறிக் கொண்டிருந்தனர். பங்கு கொண்ட கலக்டரும் தெய்வத்திற்கு வேர்க்குமோ எனக்

கேலியாக வினவினார். பக்தர்கள் ஆம் என்றனர். நிரூபிப்பதற்கு முருகப் பெருமான் மீது போடப்பட்ட மாலைகளைக் கழற்றி, கோடித் துணியைப் போர்த்தினார்கள். சற்று நேரத்தில் துணி முற்றாக நனைந்து விட்டது. மன்னிக்கும்படி கண்ணீர் மல்க கலக்டர் வேண்டிச் சென்றார்.

நக்கீரருக்கு அருளிய முருகன்

நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியவர். திருப்பரங்குன்றில் அவர் குளக்கரையில் சிவபூசை செய்யும் பொழுது அரசமர இலை கீழே விழுந்தது. பாதிஇலை நீரிலும் பாதிஇலை நிலத்திலும் விழுந்தது. நீரில் உள்ள பாதி இலை மீனாகவும் தரையில் விழுந்த பாதி இலை கொக்காகவும் மாறின. அற்புதக்காட்சியைக் கண்டதால் இவரது பூசை தடைப்பட்டது கற்கிமுகி என்ற பூதம் பூசையில் தவறு செய்வோரைப் பிடித்து, ஒரே நேரத்தில் ஆயிரம் பேரை உண்ண வேண்டுமென நியதி கொண்டிருந்தது. தவறு செய்தோர் 999 பேரை ஏற்கனவே பிடித்து மலைக்குகையில் அடைத்து வைத்துள்ளது. இவரையும் பிடித்து 1000 ஆக அடைத்துவைத்து விட்டு ஸ்நானம் செய்ய சென்றுவிட்டது. முருகப் பெருமான் நக்கீரரையும் ஏனையோரையும் காப்பாற்றினார். நக்கீரர் நன்றி வெண்பா பாடினார்.. முருகனின் வேல் அவரைக் காப்பாற்றியதன் விளைவு அவருடைய தொண்டுகள், குறிப்பாகப் பத்துப் பாட்டில் முதலாவதாக வைக்கப் பட்டுள்ளது. திரு முருகாற்றுப் படை. உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு - உலகத்தை வலம் வருகின்ற பகலவன் என உலகக் கண்ணோட்டத்தோடு தொடங்குகிறார்.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவம்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

வல்லூர் தேவராயரின் வயிற்று வலி போக்கிய முருகன்

இவர் பங்களூரில் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்நூல்களைப் பயின்றார். இவருக்குக் கொடிய வயிற்று நோய் ஏற்பட்டது. இவர் செந்தில் ஆண்டவனிடம் கந்த சட்டி காலத்தில் வந்தடைந்தார். ஆறு நாளிலும் ஆறு கசவசம் பாடித் திருவருள் பெற்றார். அப்பர் அடிகளுக்கும் சூலை நோயைக் கொடுத்துச் சிவபெருமான் ஆட்கொண்டார்.

நல்லூர்த் தேரடி

கடையிற் சுவாமிகள் பெரும்பாலும் ஓட்டமாகவே உள் வீதி, புற வீதி சுற்றிவிட்டுத் தன் வழியே போய் விடுவார். வெள்ளிக்கிழமையன்று ஒரு பெண்மணி நோயுற்ற கையுடன் அங்கு வழிபட வந்தார். கோயில் ஐயரின் தட்டத்தில இருந்த செவ்வரத்தம் பூக்கள் சிலவற்றை கடையிற் சுவாமிகள் பெற்று வாயிலிட்டு குதப்பிக் கொண்டோடவே, பெண்மணியும் அவரைப் பின் தொடர்ந்து ஓடினார். மெல்லப்பட்ட குதப்பலை உமிழ்ந்து விடவே அதை அம்மையாரும் தங் கையில் பெற்று நோயுள்ள கையில் தடவியதும் குணமாகியது. கடையிற் சுவாமிகள் செல்லப்ப சுவாமிகளின் தீட்சா குரு ஆவார்

.

ஒருபெண்மணி. அவரின் பெயர் வள்ளி. பிறவியில் கண்ணிரண்டும் குருடு. "முருகா! பொன்னும் பொருளுமா கேட்கிறேன்? உன்னைக்காணக் கண்ணொளி தருவாயா?" என அழுது புலம்பினார். இரங்கிய பக்தர் ஒருவர், "உனது காலடி மண்ணை எடுத்துப் பூசு" என்றார். அம்மையாரும்

அப்படியே செய்தார். என்ன ஆச்சரியம்! கண்கள் ஒளிபெற்றன. மருந்து சொன்னவரைக் காணவில்லை. நேர்த்திக் கடன் செய்வதாகக்கூறி மறந்தோர் பட்ட துன்பமும் தவறை எண்ணி நிறைவேற்றிப் பலன் பெற்றோரும் பலர்.

ஔவையாருக்குப் பாடம் புகட்டியவன்

ஔவையார் வெய்யிலில் நடந்து வருகையில் நாவல் மரத்தில் எருமை மேய்க்கும் சிறுவன் போல நாவற்பழம் தின்பதாக முருகன் காட்சி அருளினார். "ஓ! தம்பி ஆயாசமாய் இருக்கிற படியால் சில பழங்கள் பறித்துப் போடு" என்று வேண்டினார். "சுட்ட பழங்கள் வேண்டுமா? சுடாத பழங்கள் வேண்டுமா?" என்று குறம்புத்தனமாகக் கேட்டார் முருகன். "அப்பா! சுடாத பழங்கள் போடு" என்றதும் மரக்கிளையைக் குலுக்கி விட்டார். பாட்டி குனிந்து பொறுக்கி சிலவற்றுள் மணல் ஒட்டியமையால் வாயினால் ஊதி மணலைப் போக்கினார். "வாய் வெந்துவிடப் போகிறது பழம் ஆறியபின் சாப்பிடு" எனச் சிறுவன் கூறியதும் வெட்கமுற்று பின் வரும் வெண்பா பாடினார்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்

மரத்தில் இருந்து இறங்கிய முருகன் சுய ரூபத்தைக் காட்டி, "உம்முடன் விளையாடவே வந்தேன் உங்களுக்குச் சமமானவர் யாருளர்?" என்று கூறி உலகில் இனியது, கொடியது, அரியது, பெரியது எனப் பாடல்களைப் பாடச் செய்தார்.

அருணகிரிநாதரை அண்ணாமலையில் காப்பாற்றியவன் முருகன்

கச்சியப்பருக்குத் "திகடசக்கரம்" என்று அடியெடுத்து கொடுத்துக் கந்தபுராணம் எழுதச் செய்தவர் முருகன். கந்தபுராணத்தையும் கச்சியப்பரையும் சிவிகையில் வைத்து நகர வலம் வந்தார்கள். பத்தாயிரத்துக்கும் அதிகமான பாடல்களாக, முருகன் அருளால், கந்தபுராணம் என்னும் காவியம் தோற்றம் பெற்றது..

கந்த சஷ்டி விரதம்.

ஆறு என்பது முருகப் பெருமானுடன் தொடர்புள்ளது. சிவபெருமானது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகள் பிறந்தமை முதல் நிலை. இந்தப் பொறிகளை அக்கினியும் வாயுவும் கங்கையில் சோர்த்தமை இரண்டாவது நிலை. கங்கை தீப் பொறிகளைச் சரவணப் பொய்கையில் சேர்த்தமை மூன்றாவது நிலை. தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாக வடிவம் பெற்றமை நான்காவது நிலை. கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தமை ஐந்தாவது நிலை. உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் அணைத்து ஆறு முகங்கள் கொண்ட ஒரு திருமுருகன் ஆக்கியது ஆறாவது நிலை. இந்த ஆறு வளர்ச்சி நிலைகளும் பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாள்களும் நடந்ததென்பர் ஞானிகள்.

அருவமும் உருவுமுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய
- கந்த புராணம்

இந்த ஆறுமுகங்களும் சிவபெருமானின் சத்தியோசாதம், வாமதேவம், தத்புருடம், ஈசானம், அகோரம், அதோமுகம் ஆகும். ஆகவே ஆறுமுகன் வேறு யாருமல்லன், சிவபெருமானின் மற்றொரு வடிவமே!.

விரதம் இருந்து புராணம் கேட்பதற்கும் சாதாரணமாக கேட்பதற்கும் வேறு பாடு உண்டு. உள்ளத் தூய்மையோடு, தீயவழிகளில் மனதைப் போக்காமல் விரதம் அநுட்டிப்பது அதிக பலனைத் தரும்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்குவள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ் வில்லையே
- கந்தரலங்காரம்

முருகப்பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்தசஷ்டி விழாவாகும். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த நிலப்பரப்பாகும். மக்கள் துயர் துடைத்து உறுதுணையாக விளங்கிக் கலியுக தெய்வமாகக் காட்சி அளிப்பவன் முருகன். முருகன் என்றால் அழகன் என்னும் பொருளும் உண்டு.

சூரனோடு ஆறுநாள் போர் நடைபெற்றது. ஆறாம் நாள் சூரசங்காரம் நடைபெற்றது.. சூரன், சிங்க முகன், தாரகன் ஆகிய மூன்று அசுரர்கள் தேவர்களையும் மனிதர்களையும் துன்புறுத்தி வந்தனர். இவ்வரலாறு கந்த புராணம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. சூரன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூன்று அசுரர்களையும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாகக் கூறப்பட்டுள்ளது.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே - திருமந்திரம் - 346

இறைவனின் நோக்கம் தீமைகளை அழிப்பதேயாகும் அத்துடன் தவறை உணர்ந்து திருந்த இறையருள் துணை நிற்கும் என்பதைச் சூரசம்காரம் நிகழ்வு விளக்குகின்றது. கந்தபுராணக் கதை “சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்” - மாமரமாக நின்ற சூரனை தனது வேற்படையால் இரு கூறாக அறுத்ததைச் சிலேடையாகக் கூறப்பட்டுள்ளது.

முருகனுக்கு எண்ணற்ற திருநாமங்கள் உண்டு. கார்த்திகைப் பெண்கள் வளர்த்த காரணத்தால் கார்த்திகேயன் என்றும் ஆறு அட்சரங்களை உடையவன் என்பதால் சரவணபவன் என்றும் அழைத்தனர். சேந்தன், சேயோன், செவ்வேள், குமரன், ஆறுமுகன், குமரகுரு, சிவகுரு எனப்பல பெயரிட்டு, குழந்தைத் தெய்வமான முருகனைப் போற்றி வணங்கினர். அவருக்குரிய சிறப்பான

விரதங்களுள் கந்தசஷ்டி விரதம் மிகவும் மேன்மையானதாகும்.. தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாள்கள் கந்தசஷ்டி விரத நாள்களாகும். இந்த ஆறு நாளும் விரதமிருக்க வேண்டும். பூரண கும்பம் வைத்து, மலர்தூவி, தூப தீபம் காட்டி வழிபட வேண்டும். இந்த நாள்களில் கந்தன் சரிதம் கேட்க வேண்டும். ஏழாம் நாள் காலையில் பாரணை செய்ய வேண்டும்.

வசிஷ்ட முனிவரின் உபதேசப்படி முசுகுந்தச் சக்கரவர்த்தி சஷ்டி நோன்பைப் பல காலம் செய்து வந்ததனால் நிலவுலகம் முழவதையும் ஆளும் வல்லமை பெற்றார். வீரவாகுத் தேவரையும் உதவியாக இருக்க முருகப் பெருமான் அருள் பாலித்தார். முசுகுந்தச் சக்கரவர்த்தி கருவூர் நகரில் இருந்து அரசாட்சி செய்து வந்தார்.

“சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்” என்பது முதுமொழி. கந்தசஷ்டி விரதம் இருப்போர் குழந்தைச் செல்வம் பெறுவர் என்பது பொருளாகும். விரதம் இருக்கும்போது பட்டினி கிடப்பதால் வாய்வு பித்தம் ஆகிய உபாதைகள் உடலில் ஏற்படும். எனவே பானகம் அதாவது சரக்கரை எலுமிச்சம்பழச் சாறு ஆகிய நீராகாரம் பருகுவது பயன் தரும். இவ்விரதத்தை ஆறு வருடங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் அதிக பயனுடையதாகும்.

.

ஐப்பசி என்பது தமிழ்ப் பெயர். அஸ்வினியைக் குறிக்கும். முற்காலம் போலன்றி தற்காலத்தில் முதலாவது நட்சத்திரமான அஸ்வினியுடன் கூடிய பூரணை கூடியதால் பெயரளவிலும் இம்மாதம் சிறந்தது. மக்கள் தேய்பிறையில் செய்தலிலும் வளர் பிறையில் செய்தலையே வற்புறுத்தினார்கள். “குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே” என ஒரு புலவன் செய்யுள் பாடி முடித்தாராம். குக்குடம் என்பது கோழிக்கொடி. அதைக் கொண்ட முருகனை மனதால் எண்ணி சட்டியை அநுட்டித்தால் ஒரு குறையும் வராது என்பதாகும்.

உலகிலே காணப்படும் தீமைகளைக் களைந்து தீமை புரிந்தவர்களையும் தமது அருளினால் நல்ல வர்களாக மாற்றும் முறையினைக் கந்தசஷ்டி விளக்குகின்றது. தவறை உணர்ந்து திருந்த இறையருள் துணை நிற்கும். புலம்பெயர் நாடுகளில் சூரன் போர் வெகு விமரிசையாக நடைபெறும். ஆலயங்கள் செய்து வரும் சமூகப் பணிகளோடு முத்தமிழான இயல், இசை, நாடக வளர்ச்சித் தொண்டு செய்ய முன்வர வேண்டும். தமிழகத்தில் தனிப்பட்டவரும் ஆலயங்களும் பல்கலைக்கழகங்களை நடத்தி வருகின்றனர். சிலர் வருமானத்தைப் பெருக்கச் செய்கின்றனர் நல்லூர் போன்ற தனிப்பட்ட கோயில் நிருவாகிகள் நன் நோக்கங் கொண்டு செயற்பாடுகளை செய்வர் என நம்புகின்றோம். கல்விப் பசியில் வாடும் மக்களுக்காவது உதவலாம் எனப் பணிவுடன் முன் வைக்கின்றோம்.

மூவிரு முகங்கள் போற்றி! முகம்பொழி கருணை போற்றி!
ஏவரும் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி! யன்னான்
சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி போற்றி!

- கந்தபுராணம்

# நந்திக் கொடி



சைவத் திருக்கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களுக்கு முன்னதாக நிகழும் கொடியேற்றம் என்னும் செயலானது இறைவனது திருவருளின் ஆணைவழி உயிர்களைத் துன்பக்கடலில் நின்றும் நீக்கி பேரின்ப வழியிலே செலுத்துவான் என்பதற்குரிய அடையாளமாகும். சிவன் கோயில்களிலே ஏற்றப்படுகின்ற கொடி "சேவுயரும் திண் கொடியான்" என்று ஞானசம்பந்தரால் சிறப்பித்து அருளப்படும் விடைக்கொடி என்னும் நந்திக்கொடியாகும்.

ஒவ்வொரு சமய, கலாசார அல்லது அரச வைபவங்களில் கொடியேற்றி வைத்து நிகழ்ச்சியைத் தொடருவது சம்பிரதாயம். அவ்வாறே இன்று சைவசமய நிகழ்ச்சிகளில் ஈழத்தில் மட்டுமன்றி உலக அளவில் நந்திக்கொடியை ஏற்றிவைத்து சைவசமய நிகழ்ச்சிகள், மாநாடுகள், கருத்தரங்குகள் நடைபெறுவதைக் காணலாம்.

சிவ வணக்கத்தின் அடிப்படைகளுள் ஒன்று நந்திக்கொடி. நந்திக் கொடியைக் கண்டவுடன் சிவனது எண்ணமே சட்டெனப் புலப்படும். மிகப் பழங்காலம் முதலே நந்தி வணக்கம் இருந்து வந்துள்ளது.

சிந்துவெளி மக்களிடையே தாய்த்தெய்வம், சிவன், லிங்கம், நந்தி, விளக்குகள், சூரியன், சந்திரன், பறவை, நாகம், மரம் ஆறு போன்றன வழிபாட்டுக்குரியனவாக விளங்கியதையும், உருவ, பூசை வழிபாடு இதில் முக்கியம் பெற்றிருந்ததையும் அறிஞர்கள் இனங்கண்டுள்ளனர். இங்குள்ள உருவமும் மிருகங்களும் "பசுபதி" மூர்த்தத்திலுள்ள சிவனையே குறிப்பதாக இனங்காணப்பட்டுள்ளது.

எருது சிறப்பாக வழிபட்டதை முத்திரைகளிலுள்ள எருது உருவங்கள், சுடுமண் பாவைகள் ஆகியவை எடுத்துக் காட்டுகின்றன. குலமரபுச் சின்னங்களான கலப்பை, பனை, கழுகு, கருடன், மயில், யானை, வெள்ளை எருது ஆகியவற்றைத் தாங்கிய கொடிகள் பற்றிய குறிப்பும் புறநானூற்றில் உண்டு.

திருமுருகாற்றுப்படையிலும் கருடன், யானை, வெள்ளை எருது ஆகியவற்றின் உருவங்களைத் தாங்கிய கொடிகள் பற்றிய குறிப்புண்டு.

தமிழகத்திலுள்ள கரூர் என்ற இடத்தில் முத்திரை நாணயத்தை உருவாகுதற்குரிய அச்சு ஒன்றும் கிடைத்துள்ளது. இதன் எடை 29 கிராம் ஆகும். இதில் நின்ற நிலையிலுள்ள காளை உருவமும் அதன் முன் பக்கத்தில் நந்தி பாதமும் காணப்படுகின்றன.

இத்தகைய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்கள் மாம்பலம், வெம்பாளூர், தாராபுரம், தொண்டையன் நத்தம், வீரசிகாமணி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றின் தோற்றம் கி.மு. 3ஆம் நூற்றாண்டாகும். காஞ்சிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை நாணயங்களில் சூரியன், காளை, யானை ஆகியன காணப்படுகின்றன. சோழப் பேரரசர்களின் நாணயங்களில் முன்பக்கத்தில் நந்தி, நந்திபாதம் ஆகியன உள்ளன.

கடையெழு வள்ளல்களுள் மலையமான் வெளியிட்ட நாணயங்களில் குதிரை, நந்திபாதம், அங்குசம், பிறைச்சந்திரன், குதிரையின் மேல் சூரியன், வேலியிட்ட மரம், அம்பு, வில்லு, கொம்புகளுடன் காளைத்தலை ஆகியவை உள்ளன.

தமிழகத்து நாணயங்களில் சிவனுக்குரிய திரிசூலம், மழுகாளை, நந்திபாதம், சந்திரன், சூரியன், மலை ஆகியன சித்தரிக்கப்பட்டுள்ளமை ஈண்டு நினைவு கூரற்பாலது.

கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னாசியாவின் புழக்கத்திற்கு வந்த முத்திரை நாணயங்களில் (Punch marked coin) பலவற்றில் நந்தி உருவம் பலவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

சிவாலயங்களிலே கொடிமரத்துக்கு அடுத்த நிலையில் கோபுரத்தை நோக்கிய நிலையில் இருப்பது சிவனது வாகனமாகிய நந்தியெம்பெருமான்.

நந்திக் கொடியிலுள்ள நந்தியெம்பெருமான், காவி நிறம் என்பன அக்கொடியின் சமய மகத்துவத்தை, சிவ வழிபாட்டின் செம்மையை எடுத்துணர்த்துவனவாகும்.

சிவ வணக்கம் செய்பவர்களே நந்திக்கொடியைப் போற்றுவார்கள். வையகமெங்கும் நந்திக் கொடியின் மகிமையையும், மகத்துவத்தையும் உணர்த்துவது சைவ சமயத்தவர்களின் தலையாய பணியாகும். மிக ஆழமான அற்புதமான தத்துவார்த்தத்தைக் கொண்டமைந்த நந்திக் கொடியை போற்றி, ஏற்றி, வழிபாடு செய்வோமாக.

நந்தி நாமம் நமச்சிவாயவே.

தொகுப்பு:

திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
சிவபுரவளாகம்

உசாத்துணை நூல்:-


நந்திக் கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும்

# RUBY'S
CATERING


**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |


திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா


**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton   THISTLE HOTELS   Holiday Inn

உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம்மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)